
# சோதிடமலர்

# SOTHIDA MALAR



| | | | |
|---|---|---|---|
| சூரி | | | குரு |
| புத | சுக்ல வரு | | கேது |
| ராகு சுக், செவ் | பங்குனி மீ | | |
| சனி, நெ யுரே | | சந் | லக் |

(15-3-90 — 13-4-90)

இவ்விதழில்...........

★ **சனிமாற்றப் பலாபலன்**

- ❋ வெளிநாட்டு வாய்ப்பு உண்டா?
- ❋ சந்தேக நிவிர்த்தி
- ❋ இம்மாத வானியற் காட்சிகள்
- ❋ ஆய்வுமன்றம் இன்னும் பல

விலை ரூபா: 5-00

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 12 ❋ இதழ் 12

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

சுக்ல ஸூ பங்குனி மீ

( 14 - 3 - 90 )


ஸுராதி தேவாதி ஸேவிதாய

கல்யாண களத்ரஹேது காரணாய।

ஸூர்யாய ஸோமாக்ஷாய ஸாமவேதாய

நமோஸ்து தஸ்மை ஸாம்பேஸ்வராய॥

❋ ❋ ❋

தங்குவர் கற்பக தாருவின் நிழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாய் பிறவியை மால்வரை
[யும்
பொங்கு உவர் ஆழியும் ஈரேழு புவனமும் பூத்த
[உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே,

## நல்லவை நான்கு

நல்லவர் சகவாசத்தால் பாவம் செய்யும் மனநிலை மாறும். நல்லவற்றையே எப்போதும் மனம் நினைக்கும். மறைக்க வேண்டியவற்றை மறைக்கச் செய்யும். நற்குணங்களை வெளிவரச் செய்யும். எனவே நல்லோரை நாடுங்கள்.

நன்னடத்தையால் தந்தையைத் திருப்தி செய்யும் மைந்தனும், கணவன் நன்மையையே விரும்பும் மனைவியும், இன்பதுன்பத்தில் பங்கு கொள்ளும் நண்பனும் நமக்கு கிடைப்பதே நாம் செய்யும் பாக்கியமாகும்.

கொடுத்தல், அனுபவித்தல், அழித்தல் ஆகிய இம்மூன்று வழிகளாலும் செல்வத்தை ஆண்டனுபவிக்கலாம். ஆனால் முதலிரண்டு வழிகளையும், பின்பற்றுதவன் மூன்றுவது வழியைத் தேடிக் கொள்கிறான். எனவே பொருளை ஆண்டு கொடுத்து அனுபவித்தே வாழுதல் சிறப்பாகும்.

நல்லோர் சகவாசம் மந்த புத்தியை நீக்கியும், வாக்கில் உண்மையை வளர்த்தும் மனதில் உற்சாகத்தையும், சரீரத்தில் ஆசார ஒழுக்கத்தையும் உண்டாக்குகின்றது.

## பங்குனி உத்தரம்

கல்யாண சுந்தரமூர்த்தியை வழிபடுவதற்குரியதால் கல்யாண சுந்தரவிரதம் என்றழைக்கப்படும் பங்குனிஉத்தர நன்னாள், சிவபிரானைப் போற்றி வணங்கக் கூடியதாகும். சோதிடரீதியில் பங்குனி மாதம் மீனராசிக்குரியதாகும். பூமி மீனராசியில் அமர்ந்திருக்க (உத்தரம்-கன்னிராசி) சந்திரன் கன்னிராசியில் நின்று பூரண கலையுடன் பூமியைப் பார்ப்பதால் இத்தினம் சாஸ்த்திரமுறைப்படியும் புனிதமாகின்றது மதுரைமா நகரில் மீனாட்சியம்பாளைச் சுந்தரேஸ்வரப்பெருமானாக இறைவன் திருமணம் செய்த மங்கல தினம் என்றும் புராண வரலாறு கூறுகின்றது. அத்துடன் இவ்விரதம் அனுஷ்டித்து இதன் பேறினால் விஷ்ணு மகாலக்ஷ்மியையும், பிரமதேவன் சரஸ்வதியையும் இந்திரன் இந்திராணியையும் சூரியன் உஷாதேவியையும் சீதாதேவி இராமபிரானையும் திருமணம் செய்து கொண்டதாகவும் வரலாறுகள் தெரிவிப்பதிலிருந்து இத்தினம் மங்கல மணவிரதத்துக்குரியதாகின்றது. திருமணம் தடைப்பட்டுள்ள இளைஞர் யுவதிகள் இவ்விரதத்தை முறைப்படிஅனுஷ்டிப்பதால் திருமணப்பேறு கிடைக்கும் என உபதேசகாண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## ஸ்ரீராமநவமி

மகாவிஷ்ணு மூர்த்தியின் தசாவதாரங்களுள் ராமாவதாரமென்றும் (சைத்ரசுத்த) பூர்வபக்ஷ நவமித்திதியில் புனர்பூசநக்ஷத்திரம் கூடிய வேளையில் ராம்பிரான் அவதரித்தார். இதனால் இத்தினம் ஸ்ரீராமநவமி என அழைக்கப்படலாயிற்று. ராம நாமத்தை உச்சரித்தாலே எமதுபாவங்களெல்லாம் தீருவதாக கூறப்படுகின்றதால் அதிலும் பார்க்க விசேடமான அவரின் ஜனனதினத்தை விரத நாளாக வேல் விழாவாகவே கொண்டாடுவது மிகவும் பொருத்தமும் சிறப்புமுடையதாகும் இவ்விரததினத்தில் ஸ்ரீராமபிரானின் உருவத்தை (பொன், வெள்ளியில்) செய்வித்து அதற்கு பூஜை வழிபாடுகள் ஆற்றி மூர்த்திக்கு விசேட நிவேதமாக கடலை, அவல் முதலியவற்றை நிவேதித்து வணங்குவதும் இவ்விரதத்தின் சிறப்பாகும்.

# சுக்ல வருஷ பங்குனி மாத கிரக நிரயன ஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5 30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனாம்சம் 23 பா 43கலை 25விகலை)

| தேதி மார்ச் | பங் | நாக்ஷத்ர நேர பகல் 12-00 (ம நி. செ) | சூரியன் ☉ (ரா பா க) | சந்திரன் ☽ (ரா பா க) | செவ்வாய் ♂ (ரா பா க) | புதன் ☿ (ரா பா க) | குரு ♃ (ரா பா க) | சுக்கிரன் ♀ (ரா பா க) | சனி ♄ (ரா பா க) | ராகு ☊ (ரா பா க) | யுரேனஸ் ♅ (ரா பா க) | நெப்டி ♆ (ரா பா க) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | 23 30 27 | 11 0 25 | 6 10 3 | 9 8 45 | 10 26 33 | 2 7 38 | 9 15 0 | 8 29 35 | 9 20 56 | 8 15 29 | 8 20 35 |
| 16 | 2 | 23 34 23 | 1 25 | 6 21 58 | 9 30 | 28 28 | 7 42 | 15 52 | 29 39 | 20 53 | 15 31 | 20 36 |
| 17 | 3 | 23 38 19 | 2 25 | 7 3 50 | 10 14 | 11 0 24 | 7 45 | 16 44 | 29 44 | 20 50 | 15 32 | 20 37 |
| 18 | 4 | 23 42 15 | 3 25 | 7 15 45 | 10 59 | 2 21 | 7 49 | 17 37 | 29 48 | 20 47 | 15 34 | 20 38 |
| 19 | 5 | 23 46 11 | 4 24 | 7 27 43 | 11 43 | 4 18 | 7 54 | 18 30 | 29 52 | 20 44 | 15 35 | 20 39 |
| 20 | 6 | 23 50 7 | 5 24 | 8 9 50 | 12 28 | 6 17 | 7 58 | 19 24 | 29 57 | 20 41 | 15 36 | 20 40 |
| 21 | 7 | 23 54 3 | 6 24 | 8 22 13 | 13 13 | 8 17 | 8 2 | 20 18 | 9 0 1 | 20 38 | 15 38 | 20 40 |
| 22 | 8 | 23 57 59 | 7 23 | 9 4 55 | 13 57 | 10 17 | 8 17 | 21 13 | 0 5 | 20 35 | 15 39 | 20 41 |
| 23 | 9 | 0 1 55 | 8 23 | 9 18 1 | 14 42 | 12 18 | 8 12 | 22 9 | 0 9 | 20 32 | 15 40 | 20 42 |
| 24 | 10 | 0 5 51 | 9 22 | 10 1 34 | 15 26 | 14 19 | 8 17 | 23 5 | 0 13 | 20 29 | 15 41 | 20 43 |
| 25 | 11 | 0 9 47 | 10 22 | 10 15 34 | 16 11 | 16 21 | 8 22 | 24 2 | 0 17 | 20 26 | 15 42 | 20 44 |
| 26 | 12 | 0 13 43 | 11 21 | 10 29 59 | 16 56 | 18 22 | 8 27 | 24 59 | 0 20 | 20 23 | 15 43 | 20 44 |
| 27 | 13 | 0 17 39 | 12 21 | 11 14 45 | 17 40 | 20 23 | 8 33 | 25 56 | 0 24 | 20 20 | 15 44 | 20 45 |
| 28 | 14 | 0 21 35 | 13 20 | 11 29 44 | 18 25 | 22 24 | 8 39 | 26 54 | 0 28 | 20 17 | 15 45 | 20 46 |
| 29 | 15 | 0 25 31 | 14 19 | 0 14 45 | 19 10 | 24 24 | 8 44 | 27 53 | 0 31 | 20 14 | 15 46 | 20 46 |
| 30 | 16 | 0 29 27 | 15 19 | 0 29 41 | 19 55 | 26 23 | 8 50 | 28 52 | 0 35 | 20 11 | 15 47 | 20 47 |
| 31 | 17 | 0 33 23 | 11 16 18 | 1 14 23 | 9 20 39 | 11 28 20 | 2 8 56 | 9 29 51 | 9 0 38 | 9 20 8 | 8 15 47 | 8 20 48 |
| ஏப்ரல் 1990 1 | 18 | 0 37 19 | 11 17 17 | 1 28 45 | 9 21 24 | 0 0 15 | 2 9 3 | 10 0 50 | 9 0 41 | 9 20 5 | 8 15 48 | 8 20 48 |
| 2 | 19 | 0 41 15 | 18 17 | 2 12 45 | 21 9 | 2 8 | 9 9 | 1 50 | 0 44 | 20 2 | 15 49 | 20 49 |
| 3 | 20 | 0 45 11 | 19 26 | 2 26 22 | 22 54 | 3 58 | 9 16 | 2 51 | 0 47 | 19 59 | 15 49 | 20 49 |
| 4 | 21 | 0 49 7 | 20 15 | 3 9 39 | 23 38 | 5 45 | 9 22 | 3 51 | 0 50 | 19 56 | 15 50 | 20 49 |
| 5 | 22 | 0 53 3 | 21 14 | 3 22 39 | 24 23 | 7 28 | 9 29 | 4 52 | 0 53 | 19 53 | 15 50 | 20 50 |
| 6 | 23 | 0 56 59 | 22 13 | 4 5 23 | 25 8 | 9 7 | 9 36 | 5 54 | 0 56 | 19 50 | 15 51 | 20 50 |
| 7 | 24 | 1 0 55 | 23 12 | 4 17 55 | 25 53 | 10 43 | 9 44 | 6 55 | 0 59 | 19 47 | 15 51 | 20 51 |
| 8 | 25 | 1 4 51 | 24 11 | 5 0 17 | 26 38 | 12 13 | 9 51 | 7 57 | 1 2 | 19 44 | 15 51 | 20 51 |
| 9 | 26 | 1 8 47 | 25 10 | 5 12 30 | 27 22 | 13 39 | 9 58 | 9 0 | 1 4 | 19 41 | 9 52 | 20 51 |
| 10 | 27 | 1 12 43 | 26 9 | 5 24 37 | 28 7 | 15 0 | 10 6 | 10 2 | 1 7 | 19 38 | 9 52 | 20 51 |
| 11 | 28 | 1 16 39 | 27 8 | 6 6 38 | 28 52 | 16 16 | 10 14 | 11 5 | 1 9 | 19 35 | 9 52 | 20 52 |
| 12 | 29 | 1 20 35 | 28 7 | 6 18 34 | 29 37 | 17 26 | 10 22 | 12 8 | 1 11 | 19 32 | 9 52 | 20 52 |
| 13 | 30 | 1 24 31 | 11 29 6 | 7 0 27 | 10 0 22 | 0 18 31 | 2 10 30 | 10 13 11 | 9 1 13 | 9 19 29 | 8 9 52 | 8 20 52 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (பங்குனி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதிவரை)

(சூரிய உதயம் 6 மணி 21 நிமிஷம்)

| வாரம் | 6...21<br>7...21 | 7...21<br>8...21 | 8...21<br>9...21 | 9...21<br>10...21 | 10...21<br>11...21 | 11...21<br>12...21 | 12...21<br>1...21 | 1...21<br>2...21 | 2...21<br>3...21 | 3...21<br>4...21 | 4...21<br>5...21 | 5...21<br>6...21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.**

# நாள் நலமா?

பங் 1 வியா (15 3-90) சதுர்த்தி இரவு 11-53 வ. சுவாதி பி. இ. 1-32 வரை, அமிர்தசித்தம், சுப கருமங்கட்கு நன்று. ராகு 1 51—3-21

பங் 2 வெள் (16 3-90) பஞ்சமி பி.இ. 2-22 வரை, விசாகம் பி.இ. 4-29 வரை, சித்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-51—12-21

பங் 3 சனி (17 3-90) ஷஷ்டி பி.இ. 4-49 வரை, அனுஷம் முழுவதும் சித்தம், அவசியகருமங்கள் செய்யலாம். ராகு 9-21—10-51

பங் 4 ஞாயி (18-3 90) ஸப்தமி முழுவதும், அனுஷம் காலை 7-25 வரை, மரணம், அசுபதினம். ராகு 4-50—6 20

பங் 5 திங் (19-3 90) ஸப்தமி காலை 7-03 வரை, கேட்டை பகல் 10 06 வரை, அசுபதினம். ராகு 7-50—9-20

பங் 6 செவ் (20-3-90) அஷ்டமி காலை 8 51 வரை, மூலம் பகல் 12-22 வரை, அமிர்த சித்தம், கரிநாள். சுபதினமன்று. ராகு 3-19—4 49

பங் 7 புத (21-3-90) நவமி பகல் 10-01 வரை, பூராடம் பகல் 2-00 வரை, அமிர்தம், சுபகருமங்களை விலக்குக. ராகு 12-18 -1-48

பங் 8 வியா (22-3-90) தசமி பகல் 10-27 வரை, உத்தராடம் பகல் 2-54 வரை, சித்தம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 1-48—3-18

பங் 9 வெள் (23-3-90) ஏகாதசி பகல் 10-04 வ. திருவோணம்-மரணம் பகல் 3 00 வரை, ஸர்வ ஏகாதசி விரதம், அசுபதினம். ராகு 10-47—12-17

பங் 10 சனி (24-3 90) துவாதசி காலை 8-52 வ. அவிட்டம் பகல் 2-19 வரை. சித்தாமிர்தம், சனிப்பிரதோஷவிரதம், நற்கருமங்கட்கு உகந்தது. ராகு 9 17—10 47

பங் 11 ஞாயி (25 3-90) திரயோதசி காலை 6-55 வரை, சதுர்த்தசி பி.இ. 4-20 வரை, சதயம் பகல் 12-56 வரை, சித்தம், அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 4-46—6-16

பங் 12 திங் (26 3-90) அமாவாசை பி.இ. 1-19 வ. பூரட்டாதி-மரணம் பகல் 10-58 வரை, அமாவாசை விரதம், சுபதினமல்ல. ராகு 7-46—9-16

பங் 13 செவ் (27-3 90) பிரதமை இரவு 9-58 வ. உத்தரட்டாதி காலை 8-34 வரை, ரேவதி பி.இ. 5-54 வரை, அமிர்தம் வயற்கருமங்கட்கு நன்று. ராகு 3-14—4-44

பங் 14 புத (28-3-90) துவிதியை மாலை 6-29 வ. அசுவினி-மரணம் பி. இ. 3-13 வரை, அசுபதினம். ராகு 12-14—1-44

பங் 15 வியா (29-3 90) திரிதியை பகல் 3-02 வ. பரணி-சித்தம் இரவு 12-37 வரை, சதுர்த்திவிரதம், சுபதினமன்று. ராகு 1-44—3-14

பங் 16 வெள் (30-3 90) சதுர்த்தி பகல் 11-48 வ. கார்த்திகை-சித்தம் இரவு 10-18 வரை, கார்த்திகை விரதம், சுபதினமல்ல. ராகு 10 43—12-13

பங் 17 சனி (31-3 90) பஞ்சமி காலை 8 54 வரை, ரோகிணி இரவு 8-24 வ. அமிர்தசித்தம், ஷஷ்டிவிரதம். நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 9-13—10-43

பங் 18 ஞாயி (1-4-90) ஷஷ்டி காலை 6-29 வரை, ஸப்தமி பி.இ. 4-37 வரை, மிருகசீரிடம்-மரணம் மாலை 7-00 வரை, அசுபதினம். ராகு 4-42—6-12

பங் 19 திங் (2-4-90) அஷ்டமி பி.இ. 3-22 வரை, திருவாதிரை மாலை 6-12 வரை, சித்தாமிர்தம், கரிநாள், அசுபதினம். ராகு 7-41—9 12

பங் 20 செவ் (3-4 90) நவமி-சித்தம் பி.இ. 2-42 வரை, புனர்பூசம் முழுவதும், ஸ்ரீராமநவமி, அசுபதினம். ராகு 3-11—4-42

பங் 21 புத (4 4-90) தசமி பி இ 2-38 வரை, பூசம் மாலை 6-23 வரை, சித்தம், நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 12-11—1-42

பங் 22 வியா (5-4 90) ஏகாதசி பி.இ. 3-05 வரை, ஆயிலியம் மாலை 7-18 வரை, சித்தாமிர்தம், ஸர்வஏகாதசிவிரதம், அசுபதினம். ராகு 1-40—3-11

பங் 23 வெள் (6 4-90) துவாதசி பி இ. 4-00 வ. மகம்—மரணம் இரவு 8-41 வரை, சுபதினமன்று. ராகு 10-40—12-11

பங் 24 சனி (7-4 90) திரயோதசி பி.இ. 5-18 வ. பூரம்-சித்தம் இரவு 10-27 வரை, சனிப்பிரதோஷ விரதம், அசுபதினம், ராகு 9 09—10 40

பங் 25 ஞாயி (8-4-90) சதுர்தசி முழுவதும் உத்தரம் இரவு 12-34 வரை, அமிர்தசித்தம், பங்குனி உத்தரம், நற்கருமங்கள் செய்யலாம். ராகு 4 38—6 09

பங் 26 திங் (9-4 90) சதுர்த்தசி காலை 6-55 வரை, அத்தம்-சித்தம் பி.இ. 2-57 வரை, பூரணை விரதம்

மிகுதி ☞

## பங்குனி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

15-03-90 – 13-04-90

சூரியன்: 14-3-90 இரவு 7-22 மீனராசிப் பிரவேசம்.
15-3-90 உதயம் காலை 6-21
15-3-90 உச்சம் பகல் 12-19
15-3-90 அஸ்தம் மாலை 6-18
31-3-90 உதயம் காலை 6-13
31-3-90 உச்சம் பகல் 12-15
31-3-90 அஸ்தம் மாலை 6-17

சந்திரன்: 26-3-90 அமாவாசை இரவு 1-19
28-3-90 சந்திரதரிசனம்
10-4-90 பூரணை காலை 8-49

### கிரகங்கள்:

புதன்: மாதாரம்பத்தில் அஸ்தமனத்திலிருக்கும் இக்கிரகம் 1-4-90ல் மேற்கில் உதயமாகும். மாத முடிவில் மேற்குவானில் அஸ்தமனத்தின் பின் 20பாகை உயரத்தில் காணப்படும். 16-3-90ல் மீனராசியிலும், 31-3-90ல் மேட ராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாதத்தொடக்கத்தில் சூரியோதயம் முன் கிழக்குவானில் 45பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் சூரியனிலிருந்து கூடியதூரம் பிரிந்து 46பாகை உயரத்தில் தோன்றும். ஏறக்குறைய மாதம் முழுவதும் ஒரே இடத்தில் காணப்படும். 31-3-90ல் கும்பராசியில் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாதாரம்பத்தில் சூரியோதயம் முன் கிழக்கு வானில் 51பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 58பாகை உயரத்தில் காணப்படும். 13-4-90ல் கும்பராசியில் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாதத் தொடக்கத்தில் சூரிய அஸ்தமனத்தின்பின் கிழக்கு வானில் உச்சிக்கு கிழக்கே 8பாகை தூரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் உச்சிக்கு மேற்கே 18பாகை சரிவில் தோன்றும். மாதம் முழுவதும் மிதுன ராசியில் சஞ்சரிக்கிறது.

சனி: மாதாரம்பத்தில் சூரியோதயத்தின் முன் கிழக்கு வானில் 60பாகை உயரத்தில் காணப்பட்ட இக்கிரகம் மாத முடிவில் உச்சிக்கு 8பாகை கிழக்கில் காணப்படும். 20-3 90 அதிகாலை 1மணியளவில் மகரராசியில் பிரவேசிக்கிறது.

யுரேனஸ்: தனுராசியில் சஞ்சரிக்கின்றது.
நெப்டியூன், தனுராசியில் சஞ்சரிக்கின்றது.
புளுட்டோ: துலாராசியில் சஞ்சரிக்கின்றது.

### சமாகமங்கள்:

18-3-90 பின்னிரவு சந்திர விம்பத்தின் வடக்கு ஓரத்தில் ஒட்டினாற்போல் கேட்டை நட்சத்திரம் காணப்படும்.

21-3-90 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு சனி 2½பாகை. மறுநாள் சூரிய உதயம் முன் அவதானிக்கவும்.

22-3-90 முன்னிரவு சந்திரனுக்கு தெற்கு செவ்வாய் ½பாகை. மறுநாள் சூரிய உதயம் முன் அவதானிக்க.

23-3 90 நண்பகல் சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 2½பாகை. அன்று சூரிய உதயம் முன் அவதானிக்கவும்.

1-4-90 முன்னிரவு சந்திரனுக்கு தெற்கு வியாழன் 3½பாகை.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தம், நற்கருமங்களுக்கு உகந்தது,
ராகு 7-38 – 9.09

பங் 27 செவ் (10-4-90) பூரணை காலை 8-49 வரை, சித்திரை பி.இ. 5-33 வரை, சித்தம், வயற்கரு மங்கட்கு நன்று. ராகு 3-07 – 4-38

பங் 28 புத (11-4-90) பிரதமை பகல் 10-58 வ. சுவாதி முழுவதும் சித்தம், நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 12-06 – 1-37

பங் 29 வியா (12-4-90) துவிதியை பகல் 1-18 வ. சுவாதி காலை 8-24 வரை, அமிர்தசித்தம், அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 1-36 – 3-07

பங் 30 வெள் (13-4-90) திரிதியை - மரணம் பகல் 3-44 வரை, விசாகம் பகல் 11-21 வரை, அசுப தினம். ராகு 10-30 — 12-06


## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### சுக்ல ஸ்ரீ பங்குனி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (15-3-90 முதல் 13-4-90 வரை)

| இங் மார்ச் | தமி பங் | வாரம் | மீனம் ம.மி. முதல் (காலை) | மீனம் ம.மி. வரை | மேடம் ம. மி. வரை (காலை) | இடபம் ம. மி. வரை (பகல்) | மிதுன ம. மி. வரை (பகல்) | கடகம் ம. மி. வரை (பி.ப) | சிங்கம் ம. மி. வரை (மாலை) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலா ம. மி. வரை (இரவு) | விருச்சி ம. மி. வரை (இரவு) | தனுசு ம. மி. வரை (பி.இ) | மகரம் ம. மி. வரை (பி.இ) | கும்பம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | வியா | 6 19 | 8 2 | 9 52 | 11 54 | 2 6 | 4 13 | 6 14 | 8 13 | 10 17 | 12 27 | 2 35 | 4 31 | 6 16 |
| 16 | 2 | வெள் | 6 16 | 7 58 | 9 48 | 11 50 | 2 2 | 4 9 | 6 10 | 8 9 | 10 13 | 12 23 | 2 31 | 4 27 | 6 12 |
| 17 | 3 | சனி | 6 12 | 7 54 | 9 44 | 11 46 | 1 58 | 4 5 | 6 6 | 8 5 | 10 9 | 12 19 | 2 27 | 4 23 | 6 8 |
| 18 | 4 | ஞாயி | 6 8 | 7 51 | 9 41 | 11 43 | 1 55 | 4 2 | 6 3 | 8 2 | 10 6 | 12 16 | 2 24 | 4 21 | 6 5 |
| 19 | 5 | திங் | 6 5 | 7 48 | 9 38 | 11 40 | 1 52 | 3 59 | 6 0 | 7 59 | 10 3 | 12 13 | 2 21 | 4 17 | 6 2 |
| 20 | 6 | செவ் | 6 2 | 7 43 | 9 33 | 11 35 | 1 47 | 3 54 | 5 55 | 7 54 | 9 58 | 12 8 | 2 16 | 4 12 | 5 57 |
| 21 | 7 | புதன் | 5 57 | 7 39 | 9 29 | 11 31 | 1 43 | 3 50 | 5 51 | 7 50 | 9 54 | 12 4 | 2 12 | 4 8 | 5 53 |
| 22 | 8 | வியா | 5 53 | 7 35 | 9 25 | 11 27 | 1 39 | 3 46 | 5 47 | 7 46 | 9 50 | 12 00 | 2 8 | 4 4 | 5 49 |
| 23 | 9 | வெள் | 5 49 | 7 31 | 9 21 | 11 23 | 1 35 | 3 42 | 5 43 | 7 42 | 9 46 | 11 56 | 2 4 | 4 0 | 5 45 |
| 24 | 10 | சனி | 5 45 | 7 27 | 9 17 | 11 19 | 1 31 | 3 38 | 5 39 | 7 38 | 9 42 | 11 52 | 2 0 | 3 56 | 5 41 |
| 25 | 11 | ஞாயி | 5 41 | 7 23 | 9 13 | 11 15 | 1 27 | 3 34 | 5 35 | 7 34 | 9 38 | 11 48 | 1 56 | 3 52 | 5 37 |
| 26 | 12 | திங் | 5 37 | 7 18 | 9 8 | 11 10 | 1 22 | 3 29 | 5 30 | 7 29 | 9 33 | 11 43 | 1 51 | 3 47 | 5 32 |
| 27 | 13 | செவ் | 5 32 | 7 14 | 9 4 | 11 6 | 1 18 | 3 25 | 5 26 | 7 25 | 9 29 | 11 39 | 1 47 | 3 43 | 5 28 |
| 28 | 14 | புதன் | 5 28 | 7 11 | 9 1 | 11 3 | 1 15 | 3 22 | 5 23 | 7 22 | 9 26 | 11 36 | 1 44 | 3 40 | 5 25 |
| 29 | 15 | வியா | 5 25 | 7 6 | 8 56 | 10 58 | 1 10 | 3 17 | 5 18 | 7 17 | 9 21 | 11 31 | 1 39 | 3 35 | 5 20 |
| 30 | 16 | வெள் | 5 20 | 7 3 | 8 53 | 10 55 | 1 7 | 3 14 | 5 15 | 7 14 | 9 18 | 11 28 | 1 36 | 3 32 | 5 17 |
| 31 | 17 | சனி | 5 17 | 6 59 | 8 49 | 10 51 | 1 3 | 3 10 | 5 11 | 7 10 | 9 14 | 11 24 | 1 32 | 3 28 | 5 13 |
| ஏப் 1990 1 | 18 | ஞாயி | 5 13 | 6 54 | 8 44 | 10 46 | 12 58 | 3 5 | 5 6 | 7 5 | 9 9 | 11 19 | 1 27 | 3 23 | 5 8 |
| 2 | 19 | திங் | 5 8 | 6 51 | 8 41 | 10 43 | 12 55 | 3 2 | 5 3 | 7 2 | 9 6 | 11 16 | 1 24 | 3 17 | 5 5 |
| 3 | 20 | செவ் | 5 5 | 6 48 | 8 38 | 10 40 | 12 52 | 2 59 | 5 0 | 6 59 | 9 3 | 11 13 | 1 21 | 3 13 | 5 2 |
| 4 | 21 | புதன் | 4 2 | 6 44 | 8 34 | 10 36 | 12 48 | 2 55 | 4 56 | 6 55 | 8 59 | 11 9 | 1 17 | 3 9 | 4 58 |
| 5 | 22 | வியா | 4 58 | 6 40 | 8 30 | 10 32 | 12 44 | 2 51 | 4 52 | 6 51 | 8 55 | 11 5 | 1 13 | 3 5 | 4 54 |
| 6 | 23 | வெள் | 4 54 | 6 36 | 8 26 | 10 28 | 12 40 | 2 47 | 4 48 | 6 47 | 8 51 | 11 1 | 1 9 | 3 1 | 4 50 |
| 7 | 24 | சனி | 4 50 | 6 32 | 8 22 | 10 24 | 12 36 | 2 43 | 4 44 | 6 43 | 8 47 | 10 57 | 1 5 | 2 57 | 4 46 |
| 8 | 25 | ஞாயி | 4 46 | 6 28 | 8 18 | 10 20 | 12 32 | 2 39 | 4 40 | 6 39 | 8 43 | 10 53 | 1 1 | 2 53 | 4 42 |
| 9 | 26 | திங் | 4 42 | 6 24 | 8 14 | 10 16 | 12 28 | 2 35 | 4 36 | 6 35 | 8 39 | 10 49 | 12 57 | 2 49 | 4 38 |
| 10 | 27 | செவ் | 4 38 | 6 20 | 8 10 | 10 12 | 12 24 | 2 31 | 4 32 | 6 31 | 8 35 | 10 45 | 12 53 | 2 44 | 4 34 |
| 11 | 28 | புதன் | 4 34 | 6 15 | 8 5 | 10 7 | 12 19 | 2 26 | 4 27 | 6 26 | 8 30 | 10 40 | 12 48 | 2 41 | 4 29 |
| 12 | 29 | வியா | 4 29 | 6 12 | 8 2 | 10 4 | 12 16 | 2 23 | 4 24 | 6 23 | 8 27 | 10 37 | 12 45 | 2 36 | 4 26 |
| 13 | 30 | வெள் | 4 26 | 6 7 | 7 57 | 9 59 | 12 11 | 2 18 | 4 19 | 6 18 | 8 26 | 10 32 | 12 40 | 2 32 | 4 21 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: பங். 30உ (13-4-90) இரவு 8-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (6-18—8-26) துலாலக்னம்

# பங்குனி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

2உ (16-3-90) இரவு 12-45க்கு மீன-புத
6உ (20-3-90) பி.இ. 1-00க்கு மக-சனி
17உ (31-3-90) காலை 9-30க்கு கும்-சுக்
17உ (31-3-90) பி.இ. 2-36க்கு மே-புத
29உ (12-4-90) மாலை 6-16க்கு கும்-செவ்

## சந்திரனது இராசிநிலை


| | | | | | |
|---|---|---|---|---|---|
| பங்: 2உ | (16-3-90) | இரவு | 9-44 | முதல் | விருச்சிகம் |
| 5உ | (19-3-90) | பகல் | 10-06 | ,, | தனுசு |
| 7உ | (21-3-90) | இரவு | 8-17 | ,, | மகரம் |
| 9உ | (23-3-90) | பி.இ. | 2-45 | ,, | கும்பம் |
| 11உ | (25-3-90) | பி.இ. | 5-30 | ,, | மீனம் |
| 13உ | (27-3-90) | பி.இ. | 5-55 | ,, | மேடம் |
| 15உ | (29-3-90) | பி.இ. | 6-00 | ,, | இடபம் |
| 18உ | (1-4-90) | காலை | 7-37 | ,, | மிதுனம் |
| 20உ | (3-4-90) | பகல் | 11-59 | ,, | கடகம் |
| 22உ | (5-4-90) | மாலை | 7-18 | ,, | சிங்கம் |
| 24உ | (7-4-90) | பி.இ. | 4-57 | ,, | கன்னி |
| 27உ | (10-4-90) | மாலை | 4-14 | ,, | துலாம் |
| 29உ | (12-4-90) | பி.இ. | 4-36 | ,, | விருச்சிகம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி பங் மீ 30 உ இரவு 8-00 மணிக்கு துலா லக்னம் என அறிந்து கொண்ட பின் 'துலாம்' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த இரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1 முதல் 12 வரை இலக்கமிடுக.

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது கன்னிலக்கினம் உதயமாகின்றது. லக்கினாதிபதி 6-ம் வீட்டில் இருந்துகொண்டு குரு, சனி என்பவற்றின் திருஷ்டியைப் பெறுகின்றார். பொதுவாக நாட்டில் சுமுக நிலை தோன்றும். எனினும் 20 3-90ல் மகரத்திற்கு சனி மாறியபின் செவ், ராகு என்பவற்றுடன் சேர்வதால் வன்செயல்கள், விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு. கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படும்.




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.
## 15-03-90 முதல் 13-04-90 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமேகிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



# மேடம்

அசுவினி பரணி, கார்த்திகை 1-ம் கால்.

மேடராசிக்காரருக்கு இந்த மாதம் சூரியபகவான் 12-ல் தாம்ரமூர்த்தியாகப் பலம் குறைந்து வலம் வருவதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. குருபகவானின் குரூர கோசார சஞ்சாரமும் நிகழுவதும் இங்கு கவனிக்கப்படவேண்டும். பொதுவாக இவர்களுக்கு உடல்நலம் அடிக்கடி பாதிப்படையும். குடும்ப நலமும் குன்றும். பொருள் வருமானமும் வீழ்ச்சியுறும். எதிர்பாராத திடீர்நெருக்கடிகள் கூட ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் கடன்பயமும் உண்டாகும். வீட்டில் அல்லது குடும்பத்தில் சுபமங்கல நிகழ்ச்சிகள் நிகழுவதும் கடினம். விபத்துக்கள் சத்திர சிகிச்சைப் பயமும் கூடச் சிலருக்கு ஏற்படலாம். எனினும் அலைச்சல் மூலம் காரியசித்தி, அற்பசுகம் முதலானவையும் நிகழும். எவ்வாறாயினும் தசாபுத்தி அந்தரபலம் உள்ளவர்கள் அதிகம் பாதிப்படையமாட்டார்கள். மற்றவர்கள் தெய்வபக்தி வழிபாடுகளால் சாந்திபெறமுடியும்.

குடும்பசுகம் இடைக்கிடை கெடும். குடும்ப வருமானமும் குறைவுறும். உறவினர் - புத்திரர்களால் மனஅமைதியும் குறைவுறும். வருமானக் குறைவால் குடும்பத்தில் சச்சரவுகளும் கருத்து வேறுபாடுகள்-பிரிவுகள் கூட ஏற்படக்கூடும்.

வர்த்தகர்களுக்கு மாத ஆரம்பத்தில் விறுவிறுப்பாக நடந்த வியாபாரம் மாதக்கடைசியில் மந்தநிலையடையும். நிதிநெருக்கடிகள் ஏற்படும். பழையகடன் நிலுவைகளாலும் சிக்கலுண்டாகும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் அடிக்கடி ஏற்படும். வேலைப் பொறுப்புக் கூடினாலும் அதிகாரிகளின் நல்லெண்ணம் பெறுவதும் கடினம்.

விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். மானியம் பசளை முதலிய அரசாங்க உதவிகள் கிடைப்பதிலும் தடைதாமதங்கள் ஏற்படும். பங்காளிகளில் நட்டம் ஏற்படும்.


தொழில் பிணக்குகளால் தொழிலாளர் மத்தியில் அமைதியின்மை ஏற்படும். வேலைவாய்ப்புகள் கிடைப்பதும் கடினம். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் உண்டாகும்.

மாணவர் கல்வி முன்னேற்றத்தில் தடைகள் ஏற்படக் கூடும். ஆசிரியர்-கல்வி அதிகாரிகளுடன் கருத்து வேற்றுமைகளும் ஏற்படும். எனினும் சுய முயற்சியால் கல்வியில் தேர்ச்சியும் பெறும்.

பெண்களுக்கு நினைப்பது ஒன்று நிகழ்வது வேறொன்றாகி வேதனையான சம்பவங்கள் இந்த மாதத்தில் பெரும்பாலும் நிகழும். விவாக முயற்சிகள்கூடத் தோல்வியாக இருக்கும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச் 19பி.ப.20,21பக.24,25
ஏப். 1பக.2,3மு.ப.5இர.6,7

துரதிஷ்டநாட்கள்: மார்ச் 17,18,19மு.ப.26ப.27,
ஏப். 8ப.9,10பக 13பக.




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம் கால்

இடபராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 11ல் சுவர்ணமூர்த்தியாகப் பலத்துடன் வலம் வருவது நன்மைதரும். வியாழ பகவானும் சுபகோசார சஞ்சாரம் செய்வதும் 21-6-90 முதல் சனிபகவானின் துர்க்கோசார சஞ்சாரம் கழிவதும் சிறப்பாகும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்த மாதம் முதல் இவர்கள் பல வழிகளிலும் மனநிறைவு பெறுவர். தேகசுகம், குடும்பசுகம் என்பன முன்னேற்றம் பெறுவர். பொருள் வருமானமும் கூடும். முன் தடைதாமதப்பட்டு இழுபறிநிலையில் இருந்த காரியங்களில் வெற்றியும் பெறுவர். வீட்டுச்சிறப்பு குடும்பச் சிறப்பு-இனசன பந்துக்களின் கொண்டாட்டம், உத்தியோகச் சிறப்பு, தூரதேசப் பொருள்வரவு முதலான நற்பலன்களைப் பெரும்பாலும் எதிர் பார்க்கலாம்.

குடும்பத்தில் பெரும்பாலும் மனநிறைவு உண்டாகும். குடும்ப வருமானமும் அதிகரிக்கும். புத்திரர்-இனசன பந்துக்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். மங்கல சம்பவங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். வங்கி-நிதி வசதிகளும் அதிகரிக்கும். முதலீடுகளிலும் லாபம் கிடைக்கும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு பதவிச் சிறப்பு அல்லது பதவி உறுதிப்படுத்துதல் முதலானவை கிடைக்கும். உதவி ஒத்தாசைகளும் வசதியான மன நிறைவான இடமாற்றங்களும் பெறுவர்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவுகள் அதிகரித்தாலும் விளைச்சலும் கணிசமாக அதிகரிப்பதால் நட்டம் ஏற்படமாட்டாது. நல்ல சந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளர் பெரும்பாலும் வேலைவசதிகள் பெறுவதால் நல்ல வருமானமும் பெறுவர். தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்பும் ஏற்படும். ஒப்பந்த வேலைகளிலும் நல்லலாபம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். கணிதத்துறை-கலைத்துறை-சட்டத்துறைமாணவர் சிறப்புச் சித்திகள்-புலமைப் பரிசில்கள்-வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்கள் கூடப் பெறுவர்.

பெண்களுக்கு மனதுக்கு இனிய சம்பவங்கள் பெரும்பாலும் நிகழும். விவாகமாகாதவர்களுக்கு விவாக சித்திகூடக் கிடைக்கும் சுபமங்கல கொண்டாட்டங்கள் மனப்பூரிப்பைத் தரும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச் 22,23,27,31
ஏப். 4,9,10பக.

துரதிஷ்டநாட்கள்: மார்ச் 15,16,20, 28பக.29
ஏப். 11,12




மிருகசிரிடம் 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

மிதுன இராசிக்காரருக்கு இந்த மாதம் சூரியபகவான் 10ல் ரஜஸமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். சூரியன் பலம் பெற்றாலும் வியாழ பகவான் ஜென்மத்திலும், செவ்வாயும் இராகுவும் அட்டமத்திலும் கோசார சஞ்சாரம் செய்வதால் நன்மை தீமை கலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். சாதாரணமாகப் பொருள் வருமானம் பெறுவர். இனசன பந்துக்களின் பகைவிரோதங்கள், சோர சத்துரு பயம்-பிரயா

ணங்களில் விபத்துக்கள்-சத்திரசிகிச்சைப் பயம்-அந்நியர் தொல்லை-அலைச்சல் மூலம் காரியசித்தி புத்திரர் வழியில் மனக்கிலேசம் முதலான பலன் களும் நிகழும். தவிர்க்க முடியாத செலவுகளால் கடன்பயமும் ஏற்படும்.

குடும்பசுகம் ஓரளவு சீராக இருக்கும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்த மாதம் குடும்பவருமானமும் சற்றுக் கூடுதல் பெறும். புத்திரர் உறவினர் உதவி ஒத்தாசைகள் பெறுவது கடினம்;

வர்த்தகர்களுக்கு வியாபாரம் படிப்படியாக முன்னேற்றம் பெறும். முதலீடுகளிலும் வருமானம் வரத்தொடங்கும் ஆனால் நிதி நெருக்கடிகள் பிரச்சனைகளை உண்டாக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பதவி உயர்ச்சி முதலியன கேள்விக்குறியிலேயே இருக்கும். சிலருக்கு இடமாற்றமும் பதவிமாற்றமும் கிடைக்கக்கூடும்.

விவசாயிகளுக்கு பெரும்பாலும் பயிர்விளைச்சல் குறைவுறும். உற்பத்திச் செலவுகளும் கூலியாட்களின் கெடுபிடிகளும் ஏற்படும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் வரும்.

தொழிலாளர் பிணக்குகள் வலுவடையும். வேலையில்லாப் பிரச்சனை கூடுதலால் இவர்களின் நாளாந்த சீவியமே பெரிதும் பாதிக்கப்படும். ஒப்பந்த வேலைகளில் நட்டம் உண்டாகும்.

மாணவர் மத்தியில் இந்தமாதமும் ஏமாற்றமும் விரக்தியும் தோன்றுதலால் கல்வி முன்னேற்றம் தடைப்படும். எனினும் சுய முயற்சியுடையவர்கள் கல்வியில் தேர்ச்சியடைவர்.

பெண்களுக்குத் தடைகள்-தாமதங்கள் மூலம் காரியசித்தி கிட்டும். விவாகாதி சுபமங்கல நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இழுபறிநிலையில் இருக்கும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச் 15,24,29
ஏப் 2,6 7.11,12
துரதிஷ்டநாட்கள்: மார்ச் 17,18,22 23,31
ஏப். 1காலை.13பக.



# கடகம்

புனர்பூசம் 4ம் கால், பூசம், ஆயிலியம் கடக ராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 9ல் லோகமூர்த்தியாகப் பலக்குறைவுடன் வலம் வருகின்றார். வியாழபகவானும் 12ல் துர்க்கோசார சஞ்சாரம் செய்கின்றார். செவ்வாயும் சனியும் சேர்ந்து 7ல் சஞ்சாரம் செய்வர். எனவே கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் இவர்களுக்குப் பலப்பல கஷ்ட நட்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வருமானத்திலும் பலமடங்கு செலவுகள் கூடுதலால் கடன்பயமும் ஏற்படும். இனசன பந்துக்கள் பகை விரோதங்களும்,நண்பர்கள் எதிரிகளாகுந் தன்மையுந்தோன்றும், எதிலுமலைச்சல் ஏமாற்றம் நட்டந் தொடரும்.

குடும்பத்தில் பெரும்பாலும் அமைதிக்குறைவு ஏற்படும். கணவன் மனைவி கருத்து யேற்றுமையுடன் சச்சரவுகளும் ஏற்படும். உபதிரவங்கூடும்.

வர்த்தகர்களுக்கு இந்த மாதமும் வியாபார மந்தநிலை தொடரும். முதலீடுகளில் நட்டமேற்படும், நிதிநெருக்கடிகள் தொடரும். கறுப்புச் சந்தை வியாபாரம் நட்டத்துடன் தண்டனையையுந்தரும். அவதானந் தேவை.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வருமானமில்லாத பதவிப் பொறுப்பு ஆறுதல் இல்லாத வேலைப் பழு தொடரும். கஷ்டப்பிரதேச இடமாற்றம் கிடைத்தாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு இந்த மாதமும் பயிரழிவு தொடரும். உற்பத்திச் செலவுகளும் விளைச்சல் கணிசமாகக் குறைவுறுதலால் நட்டமும் உண்டாகும். வாழ்க்கைத்தரமும் குன்றும்.

தொழிலாளருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும். தொழில் பிணக்குகளும் இதனால் இவர்களின் நாளாந்த சீவியத்துக்கும் கஷ்டங்களும் ஏற்படும். விபத்துக்கள் ஏற்படலாம்.

மாணவர் கல்விக்குழப்பநிலை இந்தமாதமும் தொடரும் ஆனால் சுயமுயற்சியால் கல்வியில் முன்னேறும் வாய்ப்புக்களும் உண்டு. ஆசிரியர்களின் உதவிகளும் கிடைக்கும்.

பெண்களுக்கு பலப்பல பிரச்சினைகள் இந்த மாதத்தில் உண்டாகும். விவாகமாகாதவர்களுக்கு விவாகப் பேச்சு இழுபறியாக அல்லது தோல்வியாக அமைந்தாலும் ஆச்சரியமில்லை:

அதிஷ்டநாட்கள்: மார்ச் 17,18 27,31
ஏப். 2,5பக.9
துரதிஷ்டநாட்கள்: மார்ச் 20,24,25
ஏப், 1பக.2

## சிங்கம்



மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 8-ல் தாம்ரமூர்த்தியாகப் பலக்குறைவுடன் வலம் வருகின்றார். சூரியன் பலம் குன்றினாலும் வியாழபகவான், சனிபகவான், செவ்வாய், ராகு இவர்களின் சுபகோசார சஞ்சாரம் நிகழுவது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு நன்மை தீமை கலந்தபலன்களே அதிகம் நிகழும். பொருள் வருமானம், பெரியவர்கள் இனசன பந்துக்களின் உதவி, புத்திரர் சிறப்புக்கள், கிடையாது என நினைத்த பொருள்கள் கூடக்கிடைத்தல், காரிய சித்திகள், அந்நியர் உதவிகள் முதலான சுபபலன்கள் அதிகம் நிகழும். எனினும் பிதிர்வழித்துன்பங்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். புத்திரர் முதலியோரின் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதுடன் விவாகாதி சுபமங்கல கொண்டாட்டங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு இந்தமாதமும் வியாபார முன்னேற்றம் தொடரும். நிதிவசதிகளும் அதிகரிக்கும் முதலீடுகளில் அதிகலாபம் கிடைக்கும். ஏற்றுமதி இறக்குமதி செய்வோர் லாபம்பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் துன்புறுத்தல்கள் அதிகரிக்கும். வேலைப்பொறுப்புக்கள் அதிகரித்தாலும் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைப்பதும் கடினமே!

விவசாயிகளுக்கு இந்தமாதம் விளைச்சல் அதிகரிக்கும். எல்லா உதவிகளும் உரியநேரத்தில் கிடைக்கும். நல்ல சந்தைவாய்ப்பும் பெறுவர். விவசாயப்பண்ணைகளிலும் லாபம் கிடைக்கும்.

தொழிலாளருக்கு மனநிறைவான வேலைவசதிகள் கிடைப்பதால் நாளாந்தம் நல்ல வருமானமும் பெறுவர். முக்கியமாக ஆலைத்தொழிலாளர் இயந்திரத் தொழிலாளர் வருமானம் பெறுவர்.

மாணவர் கல்வியில் சிறப்பு முன்னேற்றம் பெறுவர். கணித, விஞ்ஞானத்துறை, கலைத்துறை மாணவர் சிறப்புச்சித்திகள், புலமைப்பரிசில்கள் கூடப்பெறுவர்.

பெண்களுக்கு இந்தமாதம் பெரும்பாலும் மனநிறைவான சம்பவங்கள் நிகழும். முன்பு இழுபறியாக இருந்த விவாகாதி பிரச்சினைகள்கூடச் சுமுகமாகிக் காரியசித்தியும் பெறுவர்.

அதிஷ்டநாட்கள் மார்ச் 15,16,20,29
ஏப்ரில் 2,6,7,11,12
துரதிஷ்டநாட்கள் மார்ச் 22,23,27
ஏப்ரில் 4

## கன்னி



உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2-ம் கால்

கன்னியா இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் ரஜஸ மூர்த்தியாக வலம் வருவதால் நன்மை தீமைகள் கலந்த பலன்கள் நிகழும். இவர்களின் உடல்நலம் இடைக்கிடை பாதிப்புறும். குடும்பநலம் சீராகஇருக்கும் பொருள் வருமானத்திலும் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் இராது. வருமானத்திலும் செலவுகூடுதலால் கடன் பயமும் உண்டாகும். எவ்வாறுயினும் விற்றல் வாங்கல் மூலம் லாபங்களும் கிடைக்கும். எந்தமுயற்சிகளிலும் தடைதாமதங்கள் தாண்டி அலைச்சல் மூலம் சித்தியும் பெறுவர். சிலருக்கு இடப்பிரிவு, அந்நியதேச சஞ்சாரம், சோரசத்துரு அக்கினி, ஆயுதபயம் முதலியனவும் நிகழும்.

குடும்பத்தில் குறிப்பிடக்கூடிய சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறு விட்டாலும் நல்லுறவும் அமைதியும் வளரும். புத்திரர் வழித்துன்பங்கள் தொடரும். கடன் பழுவும் ஏறும்.

வர்த்தகர்களுக்கு முன்னேறிச்சென்ற வியாபாரம் படிப்படியாக மந்தநிலை அடையும். வாடிக்கையாளர் வரவும் குறைவுறும். நிதிநெருக்கடிகளும் உண்டாகும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணம் இருக்கும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படும்.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் பயிர் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். விளைச்சலும் குறைவுறும். கூலியாட்களின் கெடுபிடி அதிகரிக்கும். நல்ல சந்தைவாய்ப்பும் கிடைப்பது கடினம்.

தொழிலாளர் வேலையில்லாமல் அவதிப்படுவர். சாதாரணமாக தினச்சம்பளம் பெறுவோர் சீவனத்துக்கும் பெரிதும் கஷ்டம் ஏற்படும்; தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம்வரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் இந்தமாதமும் தொடரும். ஆசிரியர்களின் ஆதரவால் மாணவர் சிறப்புச்சித்திகளும் பெறுவர். கலைத்துறை மாணவர் சிறப்பாக முன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்குப் பெரும்பாலும் மனக்குழப்பமான சம்பவங்கள் அடிக்கடி நிகழும். விவாகாதி பிரச்சினைகளும் இழுபறிநிலையில் தொடரும்.

அதிஷ்டநாட்கள் மார்ச் 17,18,23,31
ஏப்ரில் 4 9,13பக

துரதிஷ்டநாட்கள் மார்ச் 24,25,28பகல்,29
ஏப்ரில் 6,7




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2 3-ம் கால்

துலாம் இராசிக்காரருக்கு இந்தமாதம் 6ல் சுவர்ணமூர்த்தியாக வலம்வருவது சிறப்பாகும். பொதுவாக இவர்களுடைய தேகசுகம் குடும்பசுகம் என்பனவற்றில் சிறப்பு முன்னேற்றம் உண்டாகும், பொருள் வருமானமும் அதிகரிக்கும். இராசாங்க உதவிகள், சென்ற இடங்களில் வரவேற்பு நண்பர்கள், புத்திரர்கள் உதவிகள், காரிய சித்திகள், விற்றல் வாங்கல் மூலம் லாபம். சுபமங்கள கொண்டாட்டங்கள் அந்நிய நாட்டுப் பொருள் வரவு முதலான சிறப்புப்பலன்கள் அதிகம் நிகழும். ஆனல் சனி செவ்வாய் இராகு இவர்கள் 4ல் சஞ்சரிப்பதால் வீடுவாகன நட்டம் மாதாவழிப் பிணி பீடைகள்முதலிய கஷ்டபலன்களும் கலந்து நிகழும்

குடும்பத்தவர்களுக்குப் பெரும்பாலும் மனம்போல் நிறைவுவாழ்க்கை இந்தமாதத்தில் கிட்டும் புத்திரர் வழியில் மனநிறைவு வீட்டில் அமைதி நிலவும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் இந்தமாதமும் விறுநடைபோடும். பழைய நிலுவைக் கடன்கள் கூடவந்து சேரும். வாடிக்கையாளர் வரவும் அதிகரிக்கும். எந்த முதலீட்டிலும் அதிகலாபம் வரும்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு முதலான சிறப்புக்கள் இந்தமாதத்தில் கிடைக்கும். உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். மனவிருப்பமான பதவிமாற்றமும் பெறமுடியும்.

விவசாயிகளுக்குச் சனி பலம் குன்றுவதால் பயிர் அழிவு அதிகரிக்கும். ஆனல் விளைச்சலும் கூடுவதால் நட்டம் வராது. விளைவுகளுக்குச் சந்தைவாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் கிடைக்கும். கருத்துவேறுபாடுகள் உண்டாகும். இதனல் வருமானத்தில் குறைவும் ஏற்படும். சீவனக்கஷ்டம் வரஇடமில்லை. தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் வரும்.

மாணவர் கல்வி ஊக்கம் வளரும். வங்கித்துறை, சட்டத்துறை, கலைத்துறை மாணவர் சிறப்புச் சித்திகள் கல்விவாய்ப்பு முதலியனவும் பெறச் சாதகமான காலம்.

பெண்களுக்கு எல்லாவழியிலும் எண்ணங்களை நிறைவேற்றச் சாதகமான காலம். விவாகமுயற்சிகளும் பெரும்பாலும் சித்திபெறும். மனதுக்கினியவைகள் நிகழும்.

அதிஷ்டநாட்கள் மார்ச் 15,16,20,24,25
ஏப்ரில் 2,6,7,11,12

துரதிஷ்டநாட்கள் மார்ச் 26ப 27,30பக,31
ஏப்ரில் 8பகல்,9,10பக




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிகராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 5ல் லோகமூர்த்தியாகப் பலக்குறைவுடன் வலம்வருவது நன்மைதராது. ஆனல்21-3-90 தொடக்கம் ஏழரைச்சனீஸ்வரனின் காலம் கழிவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் என்பன ஓரளவு சீராக இருக்கும். ஆனல் கடந்த காலங்களிலும் பார்க்கப் பொருள் வருமானம் குன்றும். செலவுகளோ அதிகரிக்கும். இராசாங்கதுன்பம், பிதாவழித்துன்பங்கள், இனசன பந்துக்களின் பகைவிரோதம் அலைச்சல் ஏமாற்றம் காரியத்தடை தேசாந்தரம் போதல்முதலான கெட்டபலன்கள் பெரும்பாலும்-

நிகழும். ஆயினும் சில சுபபலன்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் சிறு சிறு பிணி பீடைகள் இந்த மாதத்திலும் தோன்றி மறையும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடுதலால் கடன் பழுவும் கூடும். புத்திரர் உறவினர் உதவிகள் கிடையாது.

வர்த்தகர்களுக்கு மாதஆரம்பத்தில் விறுவிறுப்பாக நடந்த வியாபாரம் மாத இறுதியில் மந்த நிலை அடையும். நிலுவைகள் தேக்கமடையும். வாடிக்கையாளர் வரவு குன்றும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பதவி உயர்வு பேச்சளவிலேயே இருக்கும். கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வேலைப்பொறுப்புகள் கூடும்.

விவசாயிகளுக்குச் சனிபெலம் பெறுவதால் பயிர் விளைச்சல் கூடும். கூலியாட்களும் ஒத்துழைப்புத்தருவார்கள். நல்ல சந்தை வாய்ப்பும் கிடைக்கும். வருமானமும் அதிகரிக்கும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் பெரும்பாலும் அதிகரிக்கும். தொழில் பிணக்குகள் சுமுகமாக நீங்கும். தொழில் ஒப்பந்த வேலைகளில் லாபம் அதிகரிக்கும். ஆலைத்தொழிலாளர் சிறப்படைவர்.

மாணவர் கல்வித்தடைகள் பெரும்பாலும் நீங்கத் தொடங்கும்; ஆசிரியர்கள் அதிகாரிகள் ஆதரவும் மாணவருக்குக் கிடைக்கும். சுயமுயற்சியால் பரீட்சைகளிலும் தேர்ச்சியடைவர்.

பெண்களுக்கு எதனைக்குறித்து முயற்சித்தாலும் முதலில் தடையும் ஏமாற்றமும் ஏற்படும். விவாகாதி முயற்சிகளிலும் இழுபறி நிலை தொடரும். நெருக்கடிகள் பிரச்சினைகளைக் கொடுக்கும்.

அதிஷ்டநாட்கள் மார்ச் 17,18,22,23,27
ஏப்ரில் 4,9,13பக

துரதிஷ்ட நாட்கள் மார்ச் 15,16,29
ஏப்ரில் 2,11,12



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் I-ம் கால் தனுசு இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 4ல் சுவர்ணமூர்த்தியாக வலம்வருவதால் நன்மை தீமைகலந்த பலன்கள் நிகழும், பொதுவாக இவர்களின் உடல் நலம் சீராக இருக்கும் குடும்பநலம் இடைக்கிடை குன்றும். பொருள் வருமானம் அதிகரிக்கும். இராசாங்க அநுகூலம்-வீடு-வாகனச் சிறப்பு-வீட்டில் மங்கள சுபநிகழ்ச்சிகள் நடைபெறுதல்; புத்திரர்-உறவினர் உதவி ஒத்தாசைகள் முதலான சுபபலன்கள் அதிகம் நிகழும். ஆயினும் கோர சத்துரு பயம், நீசர் தொல்லை, கருவி, விஷ அக்கினிபயம், விபத்துக்கள், அவமிருத்துப்பயம் முதலான கெட்டபலன்களும் சிலருக்குக் கலந்து நிகழும்.

குடும்பத்தில் சுகக்குறைவு இடைக்கிடை ஏற்படுதலால் செலவுகள் கூடிவரும். புத்திரர், உறவினர் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்; பெரியோர் உதவி, புண்ணிய யாத்திரைப்பலன் முதலியனவும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு இந்தமாதமும் வியாபார முன்னேற்றம் தொடரும். நிதி இருப்புக்கள் திருப்திதரும், நிலுவைக்கடன்களும் வந்துசேரும். முதலீடுகளில் லாபம் வரும். புதுமுதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சக உத்தியோகத்தர்களின் ஆதரவுடன் கூடிய உதவிகளும் பெறுவர்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் விளைச்சலும் கணிசமாகக் கூடுவதால் நட்டம் வர இடமில்லை. விவசாயப்பண்ணைகளிலும் நட்டம்வராது. நல்லசந்தை வாய்ப்பும் பெறுவர்.

தொழிலாளருக்கு ஓரளவு வேலை வசதிகள் கிடைக்கும். அதனல் சீவனத்துக்குப் போதிய வருமானம் கிடைக்கும். முதலாளி தொழிலாளி நல்லிணக்கமும் உண்டாகும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெறுவர். பரீட்சைகளிலும் சித்திபெறுவர். சட்டத்துறை, வங்கித்துறை மாணவர் சிறப்பாக முன்னேறுவர்.

பெண்களுக்கு மனதுக்கினிய காரியசித்திகள் இந்தமாதத்தில் நிகழும். இவ்வளவுகாலமும் இழுபறிநிலையில் தொடர்ந்த பிரச்சினை வெற்றிகரமாகச் சித்திபெறும்.

அதிஷ்டநாட்கள் மார்ச் 15,16 20,24,25,28ப
ஏப்ரில் 6 7,11,12

துரதிஷ்டநாட்கள் மார்ச் 17,18,30பகல்,31
ஏப்ரில் 4,5பகல்




உத்தராடம் 2,3 4, திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 3ல் தாம்ரமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வதால் நன்மை தீமை கலந்தபலன்கள் நிகழும். வியாழபகவான், சனிபகவான், செவ்வாய், ராகு இவர்கள் துர்க்கோசார சஞ்சாரம் செய்வது பொதுவாக இவர்களின் தேகசுகம் அடிக்கடி பாதிப்படையும். மனக்குழப்பமும் இவர்களுக்கு உண்டாகும். பொருள் நட்டம் இனசனபந்துக்கள் பகை விரோதங்கள், அந்நிய தேசசஞ்சாரம் ஏமாற்றம் முதலானவை நிகழும். சுக்கிரன், புதன் பலம் பெறுவதால் அற்பசுகம் அற்பலாபம் விற்றல் வாங்கல் பரிதமும் சிலருக்கு நிகழும். தெய்வபக்தி நவக்கிரகசாந்தி வழிபாடுகளால சாந்தி பெறலாம்.

குடும்பத்தில் பிணி, பீடைகள், பிரிவினைகள் மனக்கசப்புக்கள் அடிக்கடி இடம்பெறும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். கடன்பயமும் உண்டாகும். புத்திரர் முதலான உறவினர்களின் உதவிகள் கிடையாது.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். லாபம் கிடைப்பது தான் கேள்விக் குறி. நிதிநெருக்கடிகளும் முதலீடுகளில் நட்டமும் உண்டாகும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் ஏற்படும். பதவிப் பொறுப்புக்கள் கூடி வேலைப்பொறுப்புக்களும அதிகரிக்கும். வேலையில் ஆறுதல் பெறுவது கடினம்.

விவசாயிகளுக்கு பயிரழிவு கூடுதலால் விளைச்சல் குன்றும். நட்டம் ஏற்படும். கூலியாட்கள் கூட ஒத்துழைக்க மாட்டார்கள். சந்தைப் படுத்துதலிலும் சிரமங்கள் தரகர் தொல்லைசள் வரும்

தொழிலாளர் பெருமபாலும் வேலைவசதிகளின்றி அல்லலபடுவர் இவர்களின் நளாந்த சீவியமும் கஷ்டம் தரும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவது கடினம்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெரும்பாலும் தடைப்படும். மாணவர் மத்தியில் ஏமாற்றம்-விரக்தி மனப்பான்மை வளரும். ஆயினும் சுய முயற்சியுடையவர்கள் பரீட்சைகளில் தேர்ச்சி பெறுவார்கள்.

பெண்களுக்கு இந்தமாதத்தில் ஏமாற்றங்கள் பெரும்பாலும் உண்டாவதால் மன அமைதியில் லாமல் துன்பப்படுவார்கள்; விவாக முயற்சிகள் தோல்வியைத் தழுவினலும் ஆச்சரியமில்லை.

அதிஷ்டநாட்கள்: மார்ச் 17,18,22,27,31
ஏப். 8பக.9,10ப

துரதிஷ்டநாட்கள்' மார்ச் 20,21பக.
ஏப். 2,6,7




அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 2ல் ரஜஸமூர்த்தியாக வலம் வருவது நன்மை தரும். இந்த இராசியை வியாழபகவான் திருஷ்டி செய்வதும் நன்மை தரும். பொதுவாக இவர்களுக்குக் குடும்பசுகம் தேகசுகம் என்பன சிராக இருக்கும், பொருள்வருமானமும் கூடும். இனசன பந்துக்கள் கொண்டாட்டம் புத்திரர் வழிச்சிறப்புக்கள், விற்றல் வாங்கல் மூலம் லாபம் வீடு வாகன சிறப்பு பெரியோர் உதவி, எதிர்பாராத பொருள் வரவு, காரியசித்தி முதலியன கிடைக்கும். எனினும் ஏழரைச் சனீஸ்வரனின் சஞ்சாரம் தொடங்குவதால் அலைச்சல்-ஏமாற்றம்-பொருள் நட்டம்-நீசர் தொல்லை முதலியனவும் நிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். பெரியவர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். புத்திரர் வழி சுபமங்கள கொண்டாட்டங்கள் கூட நிகழும் குடும்ப வருமானமும் திருப்தி தரும்;

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் அடையும் வங்கி நிதி வசதிகளுமேற்படும். வாடிக்கையாளரின் வருகையுமதிகரிக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் மூர்த்திபலம் பெறுவதால் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிட்

டும். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகளும் பெறுவர்; பதவியுயர்ச்சிக்கு சாதகமானகாலமல்ல

விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் குறையும். பயிருற்பத்திச் செலவுகளும் அதிகரிப்பதால் இலாபம் மேலுங்குறையும். கூலியாட்களும் ஒத்து வர மாட்டார்கள்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் பெரும்பாலுங் கிடைப்பது கடினம். தொழிலாளர் வேலை கொள்வோர் மத்தியில் பிணக்குகள் வலுவடையும். தொழிலாளர் போராட்டங்களும் பெருகும்.

மாணவர் கல்வி முன்னேற்றந் தொடரும் ஆனால் சிலரின் கூட்டுறவுகளால் படிப்பில் அக்கறை குறையும்; சுயமுயற்சியுடையவர்கள் சிறப்புச்சித்தியும் பெறுவர்.

பெண்களுக்குப் பெரும்பாலும் மனச் சாந்தியான சம்பவங்களே நிகழும். விவாக மாகாதவர்களுக்கு விவாக சித்தியும் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பான ஆதரவு மனநிறைவைத்தரும், பாராட்டுக்கள் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச் 15,16,20,24,25,29
ஏப். 2,11,12
துரதிஷ்டநாட்கள்: மார்ச் 22,23 ஏப். 4,8பக.9




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் சென்மத்தில் லோகமூர்த்தியாக வலம் வருவது நன்மைதராது. வியாழ பகவானுடைய கோசார சஞ்சாரமும் பலம் குறைந்துள்ளது. ஆனால் செவ்வாய்-சனி-ராகு-சுக்கிரன் இவர்களுடைய கோசார சஞ்சாரமும் பலத்துடன் அமைவதால் நன்மையுண்டு, குறிப்பிடக் கூடிய பொருள் வருமானச் சிறப்பும் உண்டு. அந்நியர் உதவி-தூரதேசப் பொருள்வரவு-தெற்கு-தென் மேற்கு-மேற்குத்திக்குகளில் அனுகூலம்-விடுவாகன விரக்தி-காரியசித்தி-வெளிநாட்டுப் பிரயாணவசதி முதலான சுபபலன்கள் நிகழச்சாதகமான காலம். எனினும் இராசாங்க துன்பம்-காரியக்கேடு-உறவினர் நண்பர்கள் பகைவிரோதம்-புத்திரர் கஷ்டம்-காரியங்களைத் தொடங்கும்போதே தடைதாமதம் அலைச்சல் முதலான கஷ்டபலன்களும் சிலருக்குக் கலந்து நிகழும். எனினும் இவர்களுக்குத் தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும்.

குடும்பத்தவர்களுக்கு மகிழ்ச்சுகம் உண்டு. மக்கள் துன்பந் தருவர். சுபமங்கள கொண்டாட்டங்கள்நிகழ்வதும் கடினமே. குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். உணவு-உடை-அழகுசாதனப் பொருட்கள் மருந்துவகை வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். நிதிவசதிகள் கூடும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பதவியுயர்ச்சி கிடையாது. வேலைக்கஷ்டமும் உண்டு. உதவி ஒத்தாசைகளால் ஆறுதல் பெறுவர்.

விவசாயிகளுக்குச் சனிபகவான் பலம் பெறுவதால் விளைச்சல் அதிகரிக்கும். விவசாயப்பண்ணைகளிலும் நல்ல லாபம் வரும். கூலியாட்களின் ஒத்துழைப்பு உண்டு. இவர்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

தொழிலாளர் பெரும்பாலும் வேலைவசதிகள் பெறுவோரும் போதிய வருமானம் பெறுவர். ஆலைத்தொழிலாளர் சாரதிகள் சிறப்பான வருமானம் பெறுவர். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தொடரும், மருத்துவம்- பொறியல் துறையினர் சிறப்பாகச் சித்தி பெறுவர். சிலருக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் கிடைக்கும்.

பெண்கள் அலைச்சல் மூலம் காரிய சித்தி பெறுவர். இழுபறியாக இருந்த விவாகப்பிரச்சினைகூடச்சிலருக்கு விவாகசித்தியை தரும், குடும்பப் பெண்களுக்குக் குடும்பப் பிரச்சினைகள் பெரும்பாலும் நீங்கி மனஅமைதி பெறுவர்.

அதிஷ்டநாட்கள் மார்ச்: 18,22,23,27,31
ஏப்ரில்: 4,13பக
துரதிஷ்டநாட்கள் மார்ச்: 15,16,24,25
ஏப்ரில்: 6,7,11,12

---

முக்கிய குறிப்பு:-

சோதிட மலரில்' வெளியர்தும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ-ர்

# வெளிநாட்டு வாய்ப்பு உண்டா?

**சாதக விளக்கம்** (சென்ற இதழ் தொடர்)

படம் 1இல் (சென்ற இதழ்) 'ல' என்ற எழுத்துள்ள வீடு "கன்னி" எனப்படம் 2 இல் (சென்ற இதழ்) குறிக்கப்பட்டுள்ளதைக் காண்க. இந்நிலையில் உங்கள் பிறந்த இலக்கினம் என்ன என்பதை உங்கள் சாதகத்தைக் கொண்டு அறிக

இப்பன்னிரண்டு இராசிகளிலும் முன்பு கூறிய இருபத்தியேழு நட்சத்திரங்களும் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நான்கு பிரிவுகள் அல்லது நான்கு பாதங்கள் உண்டு. சில நட்சத்திரங்கள் அடுத்தடுத்த இரு இராசிகளிலும் இடம் பெறுவதுண்டு. கீழே ஒவ்வொரு இராசியின் பெயரும் இராசிக்குரிய நட்சத்திரபாதங்களும் தரப்பட்டுள்ளன. உங்கள் சாதகத்தில் உள்ள வீடுகளும் இப்பெயர்களையே கொண்டிருக்கும். சித்திரை மாதத்தில் சூரியபகவான் மேடராசியில் சஞ்சரிப்பதாக வைத்துக் கொண்டு இதனையே முதலாவது இராசியாகவும் கொள்வோமாக. ஒவ்வொரு இராசியிலும் ஒவ்வொரு மாதமும் சூரியன் சஞ்சரிப்பதாக வைத்துக்கொள்வோம்.

ஐ.வைத்தியநாதர் B Sc, Dip. in E-d
முள்ளானை இளவாலை

| மாதம்: | இராசி: | நட்சத்திர பாதங்கள்: |
|---|---|---|
| சித்திரை | மேடம் | அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் |
| வைகாசி | இடபம் | கார்த்திகை 2,3,4-ம் பாதம், ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம் பாதங்கள் |
| ஆனி | மிதுனம் | மிருகசிரிடம் 3,4-ம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதங்கள் |
| ஆடி | கடகம் | புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம் |
| ஆவணி | சிங்கம் | மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் |
| புரட்டாதி | கன்னி | உத்தரம் 2,3,4-ம் பாதம் அத்தம், சித்திரை 1,2-ம் பாதம் |
| ஐப்பசி | துலாம் | சித்திரை 3,4-ம் பாதம் சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம் |
| கார்த்திகை | விரச்சிகம் | விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை |
| மார்கழி | தனுசு | மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் |
| தை | மகரம் | உத்திராடம் 2,3,4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம் |
| மாசி | கும்பம் | அவிட்டம் 3,4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதம் |
| பங்குனி | மீனம் | பூரட்டாதி 4-ம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி |

மேலே கூறியபடி மேட இராசியை நோக்கினுல் அதில் அசுவினி 1,2,3,4-ம் பாதங்களும், பரணி 1,2,3,4-ம் பாதங்கள் கார்த்திகை 1-ம் பாதம் ஆகிய 9 பாதங்கள் காணப்படுகின்றன.

### சந்திரராசி அல்லது இராசி

ஒவ்வொருவரும் சாதாரணமாகப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் சனி மாற்றம், வியாழ மாற்றம், ராகு கேது மாற்றம் போன்றவற்றினுல் ஏற்படக்கூடிய நன்மை, தீமைகளை அறிவதற்கு சந்திரராசி அல்லது இராசி என்பது பயன்படுகின்றது. மேலேயுள்ள மாதம், இராசி, நட்சத்திரம் என்ற தலைப்பில் உங்கள் பிறந்த நட்சத்திரம் எதுவோ அதுவே உங்கள் இராசிச் சக்கரத்தில் சந்திரன் அமையும் வீடாகும். இதுவே உமது சந்திர இராசியுமாகும். உதாரணமாகப் பரணி 3-ம் பாதத்தில் பிறந்த குழந்தை மேட இராசியைக் கொண்டிருக்கும்.

அனுஷம் பிறந்த நட்சத்திரமாயின் சந்திர ராசி அல்லது இராசி விருச்சிகம். புனர்பூசம் 4-ம் பாதம் பிறந்த நட்சத்திரமாயின் ராசி கற்கடகம், ஆனுல் புனர்பூசம் 1-ம் பாதம் அல்லது 2,3-ம் பாதங்களாயின் இராசி மிதுனமாக அமையும்.

### இராசி வகைகள்

இராசிகள் பலவகையாக வகுக்கப்பட்டுள்ளன. எனவே பன்னிரண்டு இராசிகளும் வேறு வகைகளினுலும் சோதிடத்தில் கூறப்படுகின்றன.

இராசிகளை சரம் ஸ்திரம் உபயம் எனமூன்று வகையாக வகுக்கலாம்.

சரராசிகள்: மேடம், கடகம், துலாம், மகரம்
ஸ்திரராசிகள்: இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்
உபயராசிகள்: மிதுனம், கன்னி, தனுசு, மீனம்

இடபம், கடகம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் ஆகிய ஏழையும் சல இராசிகள் எனவும் கூறப்படும். இவைகளுள் பூரணமான சலராசிகளாக கடகம், மீனம் ஆகிய இரண்டும் முக்கால் பங்கு சலராசிகளாக மகரமும், கும்பமும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. துலாம் அரைப் பங்கு சல இராசியாகவும் இடபம், விருச்சிகம் காற்பங்கு சல இராசிகளாகவும் கூறப்படும். (நூல் ஞானப்பிரதீபிகை)

### உதய இலக்கினம்

உதய இலக்கினம் என்பது என்ன? எதனைக் கருதுகின்றது. என்பன போன்ற வினுக்களுக்கு விடை தேவையில்லை. ஆனுல் எது உதயலக்கினம் என்பதை நாம் அறிய வேண்டும். உங்கள் சாதகத்தில் கிரகநிலைப் படத்தை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள் அதில் "இல" அல்லது 'ல' என்று எந்த வீட்டில் அல்லது இராசியில் எழுதப்பட்டிருக்கின்றதோ அதுவே உமது உதய இலக்கினம் ஆகும். நவாம்ச நிலையை எடுத்தால் அதிலும் "இல" அல்லது 'ல' என்று ஒரு வீடுமட்டும் குறிக்கப்பட்டிருக்கும். இதுவே நவாம்ச இலக்கினமாகும்.

உதய இலக்கினமும், நவாம்ச இலக்கினமும் ஒன்றுயின் அஃதாவது ஒரே வீட்டில் இரு இராசிப் படங்களிலும் காணப்படின் உதய இலக்கினம் மிகவும் வலிமை உள்ளதாகக் கருதப்படும். இவ்வாறு வலிமைகூடிய இலக்கினத்தால் கூடுதலான நன்மைகள் சாதகருக்கு உண்டு. மிக மிக குறைவான குறிப்புக்களில் மட்டும் இது காணப்படும். இவ்வாறு காணப்படும் சாதகம் யோகமான சாதகமாகக் காணப்படும்.

இராசி நிலையிலும், நவாம்ச நிலையிலும் ஒரே வீட்டில் ஒருகிரகம் காணப்படின் இதனை வர்க்கோத்தமம் பெற்ற கிரகம் எனப்படும். இது கிரகத்துக்கு வலிமை கூடுதலாகவுள்ளது எனக்கருதும். நல்ல கிரகங்கள் வர்க்கோத்தமம் பெற்ருல் நன்மையும், தீயகிரகங்கள் வர்க்கோத்தமம் பெற்ருல் தீமையும் ஏற்படும். நல்ல கிரகங்கள் என்பவை 1,5,9 வீட்டுக்கு உரிய கிரகங்கள் 3,6,11-ம் வீட்டுக்குரிய கிரகங்கள் தீயகிரகங்கள் எனப்படும்.

"அஞ்சொன் பதுக்கதிபர் பாவி சுபரானுலும்
மிஞ்சு பலனைத் தருவர்......" (சந்திர காவியம்)

மேலும் இங்கே கூறியது பற்றி இனிமேல் வரவுள்ள வீட்டு அதிபதிகள் என்பதை (சித்திரை இதழில்) பார்க்கவும்.

கிரகங்கள் சூரியனுக்கு மிக அண்மையில் வரும்பொழுது அஸ்தங்கம் அல்லது அஸ்தமனம் அல்லது எரிதல் நடைபெறும். இக்கிரகங்களினுல் நன்மை ஒன்றும் செய்யமுடியாது. அஸ்தமனம் அடைந்த கிரகங்களை உங்கள் குறிப்பில் "அஸ" என்று கிரகத்திற்கு அருகே கிரகபாதசாரம் என்னும் இடத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும். (வளரும்)

## இலங்கை சோதிட ஆய்வுமன்றம்

மேற்படி மன்றத்தின் மாதமாதக் கூட்டம் 25-2-90 பகல் 10 மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் திரு R. முத்துலிங்கத்தின் தலைமையில் ஆரம்பமானது. அதில் செயலாளர் சென்றகூட்ட அறிக்கையும் பொருளாளர் பொருள்நிலை அறிக்கையும் வாசித்து சபையால் ஏற்கப்பட்டு உப தலைவரால் கைச்சாத்திடப்பட்டன.

பின்னர் திரு. வே. சின்னத்துரை அவர்களால் வாளேந்தியவர் வாழ்க்கை என்னும் சிறப்பு ஆய்வுக்கட்டுரை வாசிக்கப்பட்டது. அதில் தற்போது வாளேந்தியவர்களின் இராசி நிலைகளைப் பல்வேறு உதாரணச் சாதகங்கள் மூலம் விளக்கினுர். முன்னர் வாழ்ந்த கிட்லர், முசோலினி போன்ருேரின் சாதகங்களும் ஈழப்போர் வீரரின் சாதகங்களும் சபையோரின் கவனத்திற்கு எடுத்துக்கூறினுர்.

பின்னர் கலந்துரையாடலில் பிரம்மஸ்ரீ கி. சிதம்பரநாதக் குருக்கள், திரு R. முத்துலிங்கம், திரு வ. க. சாம்பசிவம் முதலானேர் தற்போதைய ஈழப்போர் வீரரின் சாதகங்கள் எவ்வாறு அமைந்தன என்பதில் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர்.

பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

— S. S. நடராசா (பொதுச்செயலாளர்)

விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் ஒரே வண்டியை இழுத்துச்செல்லும் இரு எருதுகளாகும். விஞ்ஞானி எதனையும் விஞ்ஞானத்தின் மூலம் அறியவிழைகிருன். மெய்ஞ்ஞானி எதனையும் ஆத்மபூர்வமாக அறிய விழைகிருன். நான் விஞ்ஞானத்தின் ஓர் சிறு எல்லையைத் தாண்டினுலும் இந்த அறிவிற்கும், ஆக்கத்திற்கும் ஆதாரபூர்வமாயுள்ள ஓர் சக்தி உண்டென்பதை உணர்கின்றேன்.

விஞ்ஞானமேதை — அல்பேர்ட் ஐன்ஸ்டீன்

# 'சனி' யின் மகர ராசிப் பிரவேசம் எப்போது?

க. சிவபாதசுந்தரம், சுன்னுகம்.

சந்: திருக்கணித பஞ்சாங்கத்தில் 20-3-90-ல் சனி பகவான் மகரராசிக்குப் பிரவேசிப்பதாகக் கூறப் பட்டுள்ளது. ஆனுல் வாக்கிய பஞ்சாங்கப்படி 10-2-91-ல் சனி மகரராசிக்குப் பிரவேசிப்பதாகக் கணிக்கப்படுகிறது. இதில் எதனைச் சரியானது எனக் கொள்கிறது?

நிவி: திருக்கணித பஞ்சாங்கக் கணிப்பு சரியான தென பல சந்தர்ப்பங்களில், பல ஆதாரங்களுடன் நிருபிக்கப்பட்டது. மேலும், திருக்கணித பஞ்சாங்கக் கணிப்புக்கு ஆதாரமாக வெளிநாடுகளில் இருந்து வெளிவரும் றபேல்ஸ் எபமெரிஸ் அமெரிக்கன் எபமெரிஸ், ஜேர்மன் எபமெரிஸ், இந்தியன் லாகிரி எபெமெரிஸ், மாதஜோதிடம் மணி பஞ்சாங்கம், பாலஜோதிடம், பொய்யாமொழி பாரத் கணித பஞ்சாங்கம், ஞானபூமிப் பஞ்சாங்கம், கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கம், வாசன் திருக்கணித பஞ்சாங்கம் என்பனவற்றிலும் 20-3-90-ல் சனிமாறுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. அத்துடன் 21-3-90 முன் இரவில் சந்திரன் உத்தராடம், 2-ம் பாதத்திலும், சனியும் உத்தராடம் 2-ம் பாதத்திலும் ஒன்றுசேர்ந்து சமாகமமடைவதை வானத்தில் நேரடியாக அவதானிக்கலாம். இதிலிருந்து சனி உத்தராடம் 2-ம் பாதத்தில் (மகரராசியில்) தான் இருக்கின்றதென்பது எவராலும் மறுக்கமுடியாத வெளிப்படை உண்மையாகும். வாக்கிய கணிதப் படி இச்சமாகமம் நிகழ இடமில்லை. அத்துடன் சந்திரனுக்கும் சனிக்கும் இடையில் இடைத்தூரம் ஏறக்குறைய 9பாகை வரும். ஆனுல் சமாகமம் உண்மையில் நிகழ்வதை நேரில் அவதானித்து சனிமாற்றம் நிகழ்ந்ததை உறுதிப்படுத்தி திருக்கணித பஞ்சாங்கம் சரியானது என்பதையும் ஏற்றுக்கொள்வீர்கள் என்பது திண்ணம்.

## "சந்தேக நிவிர்த்தி"

எஸ். ஏச். எம். றசீன், கல்முனை-7

சந்: குரு சனியைப் பார்த்தால் கோடிசேருமாம். சனி, குருவைப் பார்த்தால் எப்படி?

நிவி: 'குரு பார்த்தால் கோடி தோஷம் நீங்கும்' என்பது பழமொழி. குருபகவான் இருந்த இடத்திலும் பார்க்க நோக்கும் இடத்திற்கு நற்பலனை கூடுதலாக வழங்குவார். பார்வைகள் பாகைக் கணக்கின்படியே கணிக்கவேண்டும்; உதாரணமாக சனி 2பாகையிலிருக்க, அதற்கும் 7-ம் வீட்டில் குரு 20பாகையிலிருந்தால் குருவின் திருஷ்டி சனிக்கு இல்லை. கிட்டத்தட்ட 3 ரேபாகையில் இருத்தலே சிறந்தது. சனிபகவான் இருக்கும் இடத்திலும் பார்க்க நோக்கும் இடத்துக்கு தீய பலன்களையே கூடுதலாக விளைவிப்பார். சனிக்கு 3,10-ம் பார்வைகள் கொடூரமான பார்வையாகும். சனி திருஷ்டிக்கும் இடம் கஷ்ட பலனையே கொடுக்கும்.

கமலா, கொழும்பு-3

சந்: யோகத்தானம், அதிஷ்டத்தானம் இரண்டும் ஒரு ஜாதகரின் செல்வநிலை, விவாகப் பொருத்த நிலை என்பவற்றில் எந்த அளவில் பங்கு கொள்கின்றன?

நிவி: யோகத்தானம், அதிஷ்டத்தானம் இரண்டும் எவ்வளவு நெருக்கமாக இருக்கின்றதோ அதற்கேற்ப வாழ்க்கையில் உயர்ச்சி, செல்வநிலை, அதிஷ்டம் என்பன கூடுதலாகக் கிட்டும். யோகத்தானம், அதிஷ்டத்தானம் இரண்டும் ஒரே வீட்டில் ஒரே பாகையில் அமையப் பெற்றுல் மிக விசேடமான யோகபலன் கிட்டும்.

எஸ். வி. சிவானந்தன்

வியாபாரிமூலை, பருத்தித்துறை.

சந்: ஒரு ஜாதகத்தில் பத்தாம் வீட்டில் கிரகமொன்றும் இல்லையாயின் தொழில் எப்படி அமையும்?

நிவி: 10-ம் வீட்டில் கிரகம் இல்லையென்ருல் தொழில் இல்லையென்று கொள்ள முடியாது. 10-ம் வீட்டதிபதி எப்படியிருக்கின்றது. 10-ம் வீட்டை எவ்வெக் கிரகங்கள் திருஷ்டிக்கின்றன? 10-ம் அதிபன் என்ன நட்சத்திரத்தில் இருக்கின்றது என்பவற்றை ஆராய்ந்தே தொழிலைப் பற்றிக் கூறவேண்டும். மேலும் தொழிலைப்பற்றி அறிய தசாம்ச சக்கரத்தை ஆராய்ந்து பார்ப்பது நன்று.

குறிப்பு:- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட் காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

"சந்தேக நிவிர்த்தி" சோதிடமலர்

திருக்கணித நிலையம்

மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி

# சனிமாற்றம் நன்மை தருமா?

சோதிடத்தில் சனீஸ்வரன் முதன்மைவாய்ந்த ஒரு கிரகமாகும். ஒரு இராசியில் கூடிய காலம் சஞ்சரிக்கும் கிரகம் இதுவே. ஒருவருடைய ஜாதகத்தில் சந்திரன் நின்ற இராசியிலும் அதற்கு முன்பின்னுள்ள இராசிகளிலும் சனி சஞ்சரிக்கும் காலம் ஏழரை வருடமாகும், இதனையே ஏழரைச் சனி என்று கூறுவர். ஒருவருடைய ஜன்மராசிக்கு 8-ம் இடத்தில் சனி சஞ்சரிக்கும் 2½ வருடகாலம் அட்டமத்துச்சனி என்று அழைக்கப்படும்.

ஒருவரது ஜாதகத்தில் சனி யோகக்கிரகமாக மட்டும் இருந்தால் நற்பலன் செய்வார் என்று கூறமுடியாது. அவர் நற்கிரகங்களின் நட்சத்திரத்தில் சஞ்சரித்தாலும், நற்கிரக சேர்க்கை பெற்றாலும் அதிக நன்மையைச் செய்வார். பாபக்கிரகங்களின் நட்சத்திரத்தில் சஞ்சரித்தால் யோகக்கிரகமாயினும் அதிக நற்பலனை எதிர்பார்க்கமுடியாது.

பொதுவாக சொந்தவீட்டில் எக்கிரகமும் பலம்மிகுந்ததாகக் காணப்படும். இப்பெயர்ச்சியின்போது சனி ராகுவுடன் மகரத்தில் சேர்ந்திருப்பதால் நற்பலன்கள் குறைய ஏதுவாயினும் சனி தன்னுடைய ஆட்சிவீட்டில் அமர்ந்திருப்பதால் தீமைகள் அதிகம் தலைதூக்க இடமில்லை. சனியின் இராசிமாற்றத்தினால் தனிப்பட்டவர்கள் மட்டுமன்றி உலகிலுள்ள ஏனைய நாடுகளுக்கும் உயிரினங்களுக்கும் இயற்கைக்கும் சுபாசுபபலன்களைக் கொடுப்பார்.

தனுராசியில் இதுகாலும் சஞ்சரித்த சனீஸ்வரன் சுக்லவருட பங்குனிமாதம் 5-ம் திகதி திங்கட்கிழமை இரவு 1 மணியளவில் (20-3-90—1-00 A.M.) தனது ஆட்சிவீடாகிய மகரராசியிற் பிரவேசிக்கின்றார். இதனால் ஏற்படும் பலாபலன்களை ஆராய்வாம்.

உலக நாடுகளிடையே தொழில் வியாபாரத்துறை முதலியவற்றில் ஊக்கம் காணப்படும். சமாதானம், சகவாழ்வுக்கான முயற்சிகள் தோன்றியவண்ணமிருக்கும். திடீர் புரட்சிகள், துர்மரணங்கள், விமான விபத்துக்கள் என்பனவும் ஏற்படலாம். கைத்தொழில் நாடுகள் முன்னேற்றமடையும். இலங்கையின் லக்கினமான கும்பராசிக்கு அதிபதியான சனிபகவான் மகரராசியில் சஞ்சரிப்பதனால் அண்டைநாடுகளுடன் நட்புறவு மேலோங்கும். அபிவிருத்தி வேலைகள் துரிதமாக முன்னேறும். அரசியற் துறையில் சில மாற்றங்கள் தென்படலாம். 1990 கார்த்திகை, மார்கழி மாதங்களில் சனி ராகுவுடன் சம்பந்தப்படும்போது சில கஷ்டங்களும், இயற்கை அழிவுகளும் ஏற்படக்கூடும்.

தனிப்பட்டவர்களின் பலாபலன்களை மேற்கொண்டு பார்ப்போம்.

## மேடம்

இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு சனீஸ்வரன் ரஜதமூர்த்தியாகி 10-ம் ராசியில் சஞ்சரிக்கிறார்; சனிமாற்றத்தினால் பொதுவாக இவர்களுக்கு நற்பலன்கள் நிகழ இடமுண்டு. குடும்பசுகம் தேகசுகம் என்பன திருப்திகரமாக அமையும். வாழ்க்கையில் மனஉற்சாகம் ஏற்படும். உத்தியோகத்துறையினருக்கு பதவியுயர்வு அல்லது சம்பள உயர்வு ஏற்படலாம். தொழில் சம்பந்தப்பட்ட பிரயாணமும்கைகூடும். வியாபாரத்துறையினர்க்கு தொழில் முன்னேற்றம் ஏற்படினும் மறைமுக எதிர்ப்புக்களும் இடையிடையே ஏற்படலாம். உறவினர், நண்பர்களுடனான தொடர்புகள் வலுவடையும். பொருளாதாரத்துறையில் சுமுகநிலை தென்படும். குடும்பத்தில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும். திருமணத்தை எதிர்கொள்வோர்க்கு இடையிடை தடங்கல் ஏற்படும். மாணவர்க்கு கல்வித்துறையில் நற்பலனுண்டாகும். விளையாட்டுத்துறையில் ஈடுபாடும், வெற்றியும் கிட்டும்.

## இடபம்

இவ்விராசியில் ஜனனமானவர்கட்கு சனிபகவான் லோகமூர்த்தியாக 9-ம் வீட்டில் சஞ்சரிக்கின்றார். இவர்களுக்கு இதுகாலும் இருந்த அட்டமத்துச்சனி நீங்கி வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படும். புதிய தொழில்களை ஆரம்பிக்கவும் உகந்த காலமாக இருக்கின்றது. குடும்பத்தில் மகிழ்ச்சி மேலிடும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தர்கட்கு பதவியுயர்வு, சம்பள உயர்வு என்பனவும் ஏற்படலாகும். மேலதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் கிட்டும். வியாபாரிகட்கு சிற்சில

தடைகள் ஏற்படினும், வியாபாரம் நன்குநடை பெறும். உறவினர் நண்பர்களின் ஆதரவு கிட்டும். பெண்களுக்கு மனத்தில் மகிழ்ச்சி நிலவும். திருமணத்தை எதிர்நோக்குபவர்கட்கு மங்கலகருமம் கைகூடும். மாணவர்கட்கு கவலையும் மனநிம்மதிக்குறைவும் உண்டாகலாம். கல்வித்துறையில் ஊக்கம் தேவை.

### மிதுனம்

மிதுனராசியினர்க்கு அட்டமத்துச்சனி ஆரம்பிக்கின்றது. பொதுவாக எக்கருமத்திலும் இழுபறி தொடர்ந்தவண்ணம் இருக்கும். குடும்பத்தில் அலைச்சல், பிரயாசை, நிம்மதிக்குறைவு என்பன உண்டாகும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படினும், பாரதூரமாக அமையாது. உத்தியோகத்தர்கட்கு வேலைப்பழு அதிகரிக்கும். சக உத்தியோகத்தரிடையே மனவேறுபாடு ஏற்படலாம். சிலருக்கு கஷ்டப்பிரதேச இடமாற்றம்கூட கிடைக்கலாம். வியாபாரத்துறையினருக்கு வியாபாரம் மந்தநிலையைத்தரும் கடன் தொல்லைகளும் அதிகரிக்கும். குடும்பப்பெண்கள் மனநிம்மதியின்றி இருப்பர். அலட்சியமான போக்கினால் வீண்விரயம் ஏற்படலாம். மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் குன்றும். விளையாட்டுத்துறையில் ஈடுபாடு அதிகரிப்பதால் பரீட்சையில் பின்தங்கவேண்டிய நிலை தென்படும். இவ்விராசியினர் சனிக்குரிய வழிபாடுகளை மேற்கொள்ளவும்.

### கடகம்

இந்தராசியினருக்கு சனி சுவர்ணமூர்த்தியாகி 7-ம் வீட்டில் சஞ்சரிக்கின்றார். இவர்கட்கு சனி 7-ம் இராசியில் சஞ்சரிப்பினும் மூர்த்திபலம் நன்றாக அமைவதால் நற்பலன், தீயபலன் இரண்டும் கலந்தே இருக்கும். குடும்பத்தில் அமைதியின்மையும், சச்சரவும் அடிக்கடி தோன்றும். தேகசுகம் இடையிடையே பாதிப்பையேற்படுத்தும். உத்தியோகத்தர்கட்கு வேலைப்பழு அதிகமாகும். மனநிம்மதி குன்றும். வசதியற்ற இடமாற்றமும் ஏற்படலாம். வியாபாரிகட்கு வியாபாரம் சுமாராகவே இருக்கும். வங்கிநிலை மனதிருப்தியைக் கொடுக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் சச்சரவு தோன்றியவண்ணம் இருக்கும். விவாகத்தை எதிர்நோக்குபவர்களுக்கு காலதாமதம் காட்டுகின்றது. மாணவர்கட்கு கல்வி முன்னேற்றம் தடைப்படும். பரீட்சைப் பெறுபேறுகளும் சாதகமாக இல்லை.

### சிங்கம்

சிங்கராசியிற் பிறந்தவர்களுக்கு சனீஸ்வரன் ரஜத மூர்த்தியாக 6-ம் வீட்டில் வலம்வருகின்றார். மூர்த்திபலம் குறைந்தாலும் ஸ்தானபலம் இருப்பதால் இவர்களுக்கு நன்மையான பலன்களையே கொடுக்கும். பணவருவாய், வங்கிநிலை, நன்றாக இருக்கும். தேகசுகம், குடும்பசுகம் சிறப்பாக அமையும். வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும். அரசாங்க உதவிகள் உண்டு. திருமணத்தை எதிர்நோக்குபவர்களுக்கு விவாகம் கைகூடும். வீடு, வாகனம் என்பனவும் நன்றாக இருக்கும். குடும்பஸ்தர்களுக்கு வாழ்க்கை கலகலப்பாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, முன்னேற்றம் என்பன கிட்டும். வியாபாரிகளும் பலவகையான நன்மைகளையும் லாபத்தையும் பெறுவர். வியாபாரம் விரிவடையும். மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும். பரீட்சைகளில் சித்தி, புலமைப்பரிசில் என்பன கிடைக்க இடமுண்டு.

### கன்னி

இவ்விராசியில் ஜனனமானவர்களுக்கு சனி லோகமூர்த்தியாக 5-ம் வீட்டில் சஞ்சரிக்கிறார். அன்றாட வாழ்க்கையில் புதிய மாறுதல்கள் தோன்றும். நீண்ட நாளைய கனவுகள் நனவுகளாகும். இனத்தவர்களாலும் நண்பர்களாலும் உதவிகள் உண்டு. இழுபட்டுக்கொண்டிருந்த வழக்குகள் இருப்பின் அவை உங்கள் பக்கமே சாரும். கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முன்னேற முயற்சிக்கவேண்டும். விவசாயிகள் கஷ்டங்களை எதிர்நோக்கினாலும் இறுதியில் நற்பலன் காண்பர். குடும்பஸ்தர்கட்கு மகிழ்ச்சிகரமாகவே காலம் கழியும், உத்தியோகத்துறையில் இருப்பவர்கள் சில சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தாலும் கஷ்டபலன் தோன்றாது. இடமாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரிகள் பல சிரமங்களின் மத்தியிலேயே தொழிலை மேற்கொள்ளவேண்டியிருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் சில தடைகள் தோன்றினாலும் முயற்சிக்கேற்ப லாபமுண்டு.

### துலாம்

துலா இராசியினர்க்கு சனி தாம்ரமூர்த்தியாக 4ல் சஞ்சரிக்கிறார். சனி தசை சனி புத்தி நடைபெறும் ஜாதகர்கள் பல நற்பலன்களை அனுபவிப்பர், கொடுக்கல் வாங்கல் விடயங்களில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தேவையற்ற பண விரயங்களுக்கு இடமுண்டு. நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். முதியச்சொத்துக்கள் சேரும். இடையிடையே தேகசுகக்குறைவுகளையும் சமாளிக்கவேண்டியிருக்கும். குடும்பஸ்தர் மத்தியில் மனச்சந்தோஷமுண்டு. வியாபாரிகளுக்கு

வியாபாரம் பிரபல்யமடையும். பெண்கள் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுவர். ஆடம்பரத்துக்காக அதிக செலவு செய்வர். மாணவர்களுக்கு கல்வியில் சித்தியுண்டு. சங்கீதம் நடனம் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளோர் கூடிய நன்மை பெறுவர்.

### விருச்சிகம்

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு சனி ரஜத மூர்த்தியாகி 3ல் சஞ்சரிக்கிறார். இவர்களுக்கு ஏழரைச்சனி நீங்கியமை ''கடல் கடந்து கரையேறியது'' போல் மனநிறைவைக் கொடுக்கும். வாழ்க்கையில் அந்தஸ்தும் செல்வாக்கும் உயரும். எதிர்காலத்தை திட்டமிட்டுச் செயற்பட்டால் வெற்றியுண்டு. வாழ்க்கை வளம்பெறுவதற்குரிய வருமானம் கிட்டும். நினைத்த கருமங்கள், எளிதில் எண்ணியவாறு கைகூடும். நிலையான சொத்துக்கள் வந்துசேரும். உத்தியோகத்தர்கட்கு பதவியுயர்வு, சம்பளஉயர்வு கிடைக்கும். தொழிலில் மேன்மையும் விருப்பும் உண்டாகும். வியாபாரிகள் முதலீட்டுக்கேற்ப லாபம் பெறுவார்கள்; மாணவர்கள். கல்வியில் உற்சாகத்துடன் ஈடுபட்டு முன்னேறுவார்கள். ஆசிரியர்-மாணவர் உறவில் சுமுகநிலை தென்படும்.

### தனுசு

தனுராசியினர்க்கு சனி சுவர்ணமூர்த்தியாக 2ல் சஞ்சரிக்கிறார். இவர்களுக்கு ஏழரைச்சனி ஆரம்பிக்கிறது. இவர்கள் பல அதிர்ச்சியான சம்பவங்களைத் தாங்கிக்கொள்ள நேரிடும். நண்பர்கள் உறவினர்கள் உங்களை அலட்சியப்படுத்தலாம். வாங்கிய கடன்கள் கொடுப்பதில் பல கஷ்டங்கள் தோன்றும். எனினும் விரைவில் அவை நிவிர்த்தியாகும். சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் சாத்தியமில்லை. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ளாமல் அவதானமாக நடக்கவும். வியாபாரிகள் முதலீட்டுக்கேற்ற லாபத்தைப்பெறுவது கடினம். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கக்குறைவு தென்படுகிறது. ஊக்கமும், அவதானமும் தேவை.

### மகரம்

இவ்விராசியினருக்கு சனிபகவான் லோகமூர்த்தியாக ஜன்மத்தில் சஞ்சரிக்கின்றார். இவர்கட்கு ஏழரைச்சனி நடுக்கூறு நடைபெறும். சனீஸ்வரன் இவ்விராசியினர்க்கு அதிபதியாகையால் இக்காலத்தில் கஷ்டத்தின்மேல் நன்மைகளும் ஏற்படலாம். பொருளாதாரநிலை அடிக்கடி பாதிப்படையும். சுலபமாக நிறைவேறும் கருமங்கள் இழுபறிநிலையிலேயே இருக்கும். குடும்பத்தில் மனக்கவலை தோன்றக்கூடும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். குடும்பத்தில் சச்சரவுகளும், கருத்துவேற்றுமையும் தோன்றலாம். உத்தியோகத்துறையினருக்கு மனச்சஞ்சலமும், வசதியற்ற இடமாற்றமும் ஏற்படக்கூடும். வியாபாரத்துறையினருக்கு முதலீடுகள் நற்பலனளிக்காது. புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. பெண்களுக்கு குடும்பத்தில் நிம்மதி குன்றும். விவாகமாகாதோருக்கு விவாக வாழ்க்கை இழுபறிநிலையை அடையும். மாணவர்கட்கு கல்வியில் தடை ஏற்படும் எனினும் முயற்சி பலனளிக்கும்.

### கும்பம்

கும்பராசியினருக்கு சனி சுவர்ணமூர்த்தியாக 12-ம் ராசியில் சஞ்சரிக்கவுள்ளார். அதாவது இவர்களுக்கு 20-3-90 இல் ஏழரைச்சனி ஆரம்பமாகின்றது. சனிபகவான் ஸ்தானபலம் குன்றினும், மூர்த்திபலம் நன்றாக அமைவதால் ஓரளவு நற்பலன்கள் நிகழ இடமுண்டு. பொருளாதார நிலை உயரும். எவ்விடயத்தையும் நிதானத்துடன் அணுகினால் வெற்றி உங்கள் பக்கமே கிடைக்கும். குடும்பசுகம், தேகசுகம் என்பன திருப்தியளிக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சீரடையும். குடும்பத்தினருக்கு சுமுகநிலை தென்படும். உத்தியோகத்தர்களுக்கு நல்லவருவாய் கிடைப்பினும் வேலைப்பழுவும் பிரயாசையும் அதிகமாகும். வியாபாரத்துறையினர் தமது முதலீடுகளை விரிவுபடுத்தி அதிகலாபத்தைப் பெறுவர். புதிய திட்டங்களை மேற்கொள்ளவும் உகந்தது. பெண்களுக்கு வாழ்க்கை வளம்பெறும். மணமாகாதோருக்கு திருமணம் கைகூடும். மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் தேவை.

### மீனம்

இந்த இராசியினருக்கு சனிபகவான் தாம்ர மூர்த்தியாக 11-ம் ராசியில் சஞ்சரிக்கின்றார். மூர்த்திபலம் குன்றியிருப்பினும், ஸ்தானபலமும், குருவின் சஞ்சாரமும் நன்மையான பலன்களை நல்கவுள்ளன. நினைத்தகாரியங்கள் யாவும் வெற்றியாகவே முடியும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். வாழ்க்கையில் சந்தோஷமும், நல்ல திருப்பமும் உண்டாகும். இனி மனவிரோதத்துடன் நடந்து கொண்டவர்கள் உதவி புரிவர். குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் மேலிடும். நல்ல பலன்தரும் பிரயாணங்களும் ஏற்படலாம். தேகசுகம் திருப்தியளிக்கும்; உத்தியோகத்துறை

யினருக்கு பதவியுயர்ச்சி, வசதியான இடமாற்றம் சம்பளஉயர்வு என்பன கிடைக்கப்பெறும். வியாபாரத்துறையினருக்கு வியாபாரம் சிறப்புற நடக்கும். புதிய முதலீடுகள் நன்மையளிக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். மணமாகாதோருக்கு திருமணம் விரைவில் நிறைவேறும் மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம், பரீட்சையில் சித்தியென்பன கிடைக்கும்.

## பஞ்சாங்கங்கள் திருக்கணித முறைப்படியே கணிக்கப்படவேண்டும்.

காஞ்சி ஸ்வாமிகள் கருத்து

வாக்கியப்படி பஞ்சாங்கங்கள் கணிப்பதால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. கணிதப்படி பஞ்சாங்கங்கள் கணிக்கவேண்டும். என்று காஞ்சி காமகோடி பீடம் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தெரிவித்தார்.

சென்னையில் அண்மையில் அகில உலக ஜோதிட மாநாட்டை ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் துவக்கி வைத்து உரையாற்றும் போது "ஜோதிட சாஸ்திரம் இந்துசமயத்தில் வேதத்திற்கு அங்கமாகச் சொல்லப்பட்டது என்றும் ஆனாலும்கூட ஜோதிட சாஸ்திரம் அனைவருக்கும் சொந்தமானது. இதில் பாகுபாடு எதுவும் கிடையாது. அனைத்துச் சமயத்தினருக்கும் பலன் தரக்கூடியது என்றும் கூறினார். மேலும் 'அனைத்தும் விதிப்படிதான் நடக்கும், பிரச்சினைகளின் வேகத்தைக் குறைப்பதற்கும், இனி வருங்காலத்தில் துன்பங்கள் வராமலிருப்பதற்கும் சோதிடம் உதவியாக இருக்கும். சோதிடம் என்பது சோம்பேறித் தனத்தை சொல்லிக் கொண்டிருப்பதல்ல வெயிலின் வெப்பத்தைத் தடுக்க, அதன் வேகத்தைக் குறைக்க நமக்கு குடையும் செருப்பும் உதவுவது போல, சோதிடம் மனிதர்களின் துன்பங்களின் வேகத்தைக் குறைக்க உதவியாக இருக்கிறது கணிதப் பிரகாரம் ஜாதகம் கணிக்க வேண்டியது அவசியம்' என்றார்.

இந்தமாதம் 17-ம் திகதிவரை நடைபெற்ற இந்த மாநாட்டில் நாட்டின் பல பகுதியிலிருந்து சோதிடர்கள் கலந்துகொண்டனர். (22-2-1990 —உதயன்)

## மீன லக்கின ஆணும் கன்னி லக்கின் பெண்ணும் சேர்வது தீமையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

எதையும் உணரக்கூடிய மனிதர் மீனகாரர். கன்னிகாரியின் மனநிலை, தேவைகள், உணர்ச்சிகளை கண்டுவிடுவார் அவர். அவளுடைய துக்கத் தன்மை, விமரிசிகத்தன்மைகளை அவர் கண்டு பிடித்துவிடுவார். இவற்றில் அவர் ஈடுபடாதவராகையால் இவற்றிற்கு அவர் கண்டும் காணாதவராகிவிடுவார். எந்த முடிவென்றாலும் அவள் தான் எடுப்பாள். அவற்றில் அவள் பிழைவிடாதிருந்தால் அவற்றை அவர் ஏற்றுக்கொள்வார். அவள் பிழைவிட்டால் அதை அவர் உடனே சுட்டிக்காட்டி விடுவார். பொருளாதார வகையாலும் அவளே நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில் அவர் ஒரு பெருத்த செலவாழி. எவ்வளவு தெண்டித்தாலும் அவரால் மிச்சம்பிடிக்க முடியாது. தங்களுக்குள்ளிருக்கும். முரண்பாடுகளைப் பேசித் தீர்க்க அவள் முன்வருவாள். ஆனால் அவர் அதிலிருந்து ஒதுங்கி நின்றுவிட்டு தன்பாட்டிலேயே அவர் முடிவெடுக்க முற்படுவார். பின்பு தன் முடிவுகளை அவளுக்கு தெரிவிப்பார். இந்த உறவில் பங்காக இருப்பது மிகவும் கடினம். தாய்மை என்னும் விடயத்தில் அவ ஈடுபட்டுக்கொண்டிருப்பா. இந்தநேரம் அவர் மனச்சோர்வுற்று தனித்திருப்பார். அல்லது சீவியம் அவருக்கு கடினமாகத் தோற்றும்.

பாலியல்பில் அவரது மனம் குழப்பமடையும். அவர் நினைப்பவை எல்லாவற்றையும் அவளுக்கு வீரத்தை இழப்பதாக இருக்கும். அவனுடன் ஒத்துப்போக அவளால் ஏதும் கொடுக்கமுடியும் ஆனால் அவையெல்லாம் அவளுக்கு ஒரு பாரமாகவிருக்கும். கன்னியின் மனநிலைவுகள் எல்லாம் மட்டுப்படுத்தப்பட்டவையே.

இந்த உறவை வெற்றியாக்குவதற்கு சலுகைகள் தேவைப்படும்,

விற்பனையாகிறது! விலை ரூபா 7-00

**சனிபகவான் பெயர்ச்சி பலாபலன்கள்**

மிகவிரிவாக எழுதப்பட்ட தனிப்புத்தகம்

வெளியீடு: திருக்கணித நிலயம்

**கட்டுரைப்போட்டி** **பரிசு ரூபா: 100/-**

எதிர்வரும் பிரமோத வருஷத்தில் 'சோதிடமலருக்கு' 13-வது ஆண்டு ஆரம்பமாவதையொட்டி இக்கட்டுரைப்போட்டி நடாத்தப்படுகின்றது.

## ★ இந்துசமயத்தில் சோதிடத்தின் தொடர்பு ★

**நிபந்தனைகள்:-**

- மேற்சொன்ன தலைப்பில் **கட்டுரை** எழுதப்படல் வேண்டும்.
- அவை புல்ஸ்காப் தாளில் ஏறக்குறைய நான்குபக்கங்கள் கொண்டதாக அமையவேண்டும். கட்டுரையாளர்கட்கு வயதெல்லை கிடையாது.
- பரிசுபெறும் கட்டுரைக்கு ரூபா 100/- ரொக்கம் வழங்கப்படுவதுடன் அக்கட்டுரை ஆண்டுச் சிறப்பிதழில் பிரசுரிக்கப்படும்.
- போட்டியின் முடிவுகளுக்கு ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.
- கட்டுரைகள் 31-03-90க்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

☞ "கட்டுரைப் போட்டி, சோதிடமலர்"
திருக்கணித நிலையம்,
மட்டுவில், சாவகச்சேரி.

---

அன்பார்ந்த சோதிடர்களே! பண்பார்ந்த வாசகர்களே!

நட்பார்ந்த வாடிக்கையாளர்களே!

## ஓர் அறிவித்தல்

எதிர்வரும் (பிரமோத புதுவருட) சித்திரை இதழ், சோதிடமலரின்

## 13-ம் ஆண்டுச் சிறப்பு மலர்

இம் மலரினை
- சோதிட மேதைகளின் ஆய்வுக் கட்டுரைகள்
- பிரமோத வருடப் பலாபலன்கள்
- ஆத்மீகப் பெரியார்களின் ஆக்கங்கள்
- சுமார் 100 விண்ணப்பதாரிகட்கு ஆய்வுமன்ற பதில்கள்.
- மற்றும் வழமையான எல்லா அம்சங்களும் மெருகூட்டுகின்றன.

மேலும், உங்கள் கைவண்ணத்திலுதித்த கட்டுரைகள், கவிதைகள், விமர்சனங்கள் மற்றும் ஆக்கங்களும் இடம்பெறவேண்டுமா?

எழுதுங்கள் 25-03-90க்கு முன்பு

ஆசிரியர், 'சோதிடமலர்'
மட்டுவில் — சாவகச்சேரி

***************************************

# ஆய்வு மன்றம்

***************************************

க. ஈஸ்வரி, தெல்லிப்பளை.

உங்கள் ஜாதக விபரங்களின்படி ஜன்மலக்கினம் சிங்கம். 2-ம், 7-ம், 11-ம் அதிபதிகள் பாபக்கிரகங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் திருமணம் தாமதமடைகின்றது. தொழில்வாய்ப்பிலும் அதிக முன்னேற்றம் தென்படவில்லை.

சு. செல்வக்குணசந்திரன் பருத்தித்துறை.

உங்கள் ஜாதகத்தின்படி வியாழன் மிதுன ராசியில் சஞ்சரிக்கும் காலம் நன்மையானதே. 10-ம் அதிபன் லக்கினத்தில் ஆட்சிப் பெறுவதால் உள்நாட்டில் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

ஐ. லக்ஷ்மன் யாழ்ப்பாணம்.

தங்கள் கேள்விக்குரிய விடயம் ஆய்வுமன்றத்தில் ஆராயப்படக்கூடிய தொன்றல்ல. வெளிநாட்டு ஜாதகக்கணிப்புமுறை வேறு, உள்நாட்டு ஜாதகக்கணிப்பு முறை வேறு. தங்களின் தேவையை "திருக்கணித நிலையம்" சோதிடப் பகுதிக்கு எழுதி பூர்த்தி செய்து கொள்க.

திருமதி பா. சாந்தினி நாவலர்வீதி. நல்லூர்.

உங்கள் விபரங்களின் பிரகாரம் நீங்கள் எழுதியுள்ள கிரகநிலை சரியாகவே அமைந்துள்ளது. குரு மஹாதெசையில் புதன் புத்தி நிகழ்கின்றது. 1990-2-10ல் கேதுபுத்தி ஆரம்பிக்கின்றது.

எம். மூக்கன், தலன்கண்டா, லின்டுலா.

உங்கள் கேள்விக்கு சாதாரணமான முறையில் பதிலளிக்க முடியாது. ஆயினும் 1992-ம் ஆண்டின் மேல் புதன் தசை வெள்ளிபுத்தி நன்மையான காலமல்ல.

செல்வி. தேவசேறுபதி ஜெயந்தி, மூளாய், சுழிபுரம்.

உங்களுடைய ஜாதகப்படி 7-ம் வீட்டில் சனி ஆட்சிப் பெறுவதும், லக்கினத்திலிருக்கும் செவ்வாயைச் சனி நோக்குவதும் திருமண விடயத்தில் தடை தாமதங்களை ஏற்படுத்தவே செய்யும். தற்பொழுது இராகு மஹாதெசையில் சனி புத்தி நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இது 1991 அக்டோபர் மாதம் வரை இருக்கும். அதன்மேல் மங்கல கருமங்கள் கைகூட இடமுண்டு.

---

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு, பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் பூரணமாக நிரப்பப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படா. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................


பிறந்த திகதி: ஆங்கிலம் ..................................................

தமிழ் ..................................................

,, நேரம்: ..................................................

,, இடம்: ..................................................

நட்சத்திரம்: .................................................. ம்-பாதம்




ஜனனகாலம்.................................தசைஇருப்பு

..............................

வரு.........மா.........நாள்.........

Registered as a News Paper at the G.P.O. Sri Lanka.

[illegible]

[illegible]

## திருக்கணிதப் பஞ்சாங்கம்

(1990 - 91) [illegible]

(விலை ரூபா: 28-00 மட்டுமே)

[illegible]

Edited by K. Sachchidananda Sarma, Printed and Published by S. Sithambaranatha Kurukkal, Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 240

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.


## "அரியதோர் வாய்ப்பு"

மில்க்வைற் உற்பத்தி விற்பனையாளர்கட்கு,
மில்க்வைற் நீலசோப் 72 கட்டி அல்லது பார்சோப் ஒரு டசின் சுற்றிவரும் தாள்கள் 100, தங்களை ஒரு பெட்சிற்றுக்கு உரியவராக்குகிறது.

இது ஒரு தொடரும் பரிசுத் திட்டம்
தொடர்ந்தும் இத்தாள்களைச் சேகரியுங்கள்

# மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233



"பஞ்சாங்கங்கள் கணித முறைப்படியே கணிக்கப்படல் வேண்டும். அவையே காட்சிக்கும் பலனுக்கும் சரியொத்திருக்கும்"

— அகில இந்திய சோதிடர் மாநாட்டில் காஞ்சி காமகோடி பீடம் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

**அமோகமாக விற்பனையாகின்றது!**

## (1990 - 91) புதுவருட

# திருக்கணித பஞ்சாங்கம்

(விலை ரூபா: **28-00** மட்டுமே)

வழமையான எல்லா அம்சங்களுடன் இம்முறை அழகிய மஞ்சள்நிற அட்டையும் மெருகூட்டுகின்றது.

விபரங்களுக்கு:
**திருக்கணித நிலையம்**
மட்டுவில். — சாவகச்சேரி.


Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280